ISSN: 2582-5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஜனவரி. 30, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 7 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 112 ❖ ரூ.10

### தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு 'மீடியா மேனியா'

# சாடல்

## தினந்தோறும் தன்னைப் பற்றி ஏதாவது ஒரு செய்தி வரவேண்டும் எனச் செயல்பட்டு வருகிறார்" ; தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி





புதுக்கோட்டை, ஜன. 30-

கேரளம், தெலங்கானா, தமிழ்நாடு ஆளுநர்களுக்கு இடையே யாருடைய பெயர் ஊடகங்களில் அதிகம் வருகிறது என மறைமுகப் போட்டி நடக்கிறது என தமிழக சட்டத்துறை அமைச்சரும் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எஸ். ரகுபதி ஆளுநருக்குப் பதில் அறிக்கை விட்டு விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆளுநர் ஆர்.என். ரவிக்கு 'மீடியா மேனியா' நோய் தாக்கியுள்ளதைப் போலத் தெரிகிறது. தினந்தோறும் தன்னைப் பற்றி ஏதாவது ஒரு செய்தி வரவேண்டும் எனச் செயல்பட்டு வருகிறார். அதிலும் குறிப்பாகத் தென் மாநிலங்களில் உள்ள கேரள ஆளுநர் ஆரீப் முகமது கான், தெலங்கானா ஆளுநர் தமிழிசை, தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி ஆகிய மூவருக்கும் தங்களுக்குள் யாருடைய பெயர் அதிகமாக மீடியாக்களில் வருகிறது என்ற மறைமுகப் போட்டியே இருப்பது போலத் தெரிகிறது. மூவரும் தாங்கள் ஆளுநர் என்பதையே மறந்து, பா.ஜ.கட்சியால் அனுப்பப்பட்ட அந்தந்த மாநில செய்தித் தொடர்பாளர்களைப் போல நடந்து கொள்கிறார்கள். நேற்றைய தினம் நாகப்பட்டினம் சென்ற ஆளுநர், அதன்பிறகு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார். நாகை மாவட்டத்தில் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி விமர்சித்துள்ளார். வீடுகள் சரியில்லை என்றும் இதற்குக் காரணம் தமிழ்நாடு அரசின் நிர்வாக அக்கறையின்மை என்றும், ஊழல் என்றும் வாய்க்கு வந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்.

அரசு திட்டத்தில் ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால் அது குறித்துக் கேட்டறியலாம். அதை விட்டு விட்டு எதிர்க்கட்சியைப் போல மீடியாக்களில் விமர்சனம் செய்யக் கிளம்புவதுதான் ஒரு ஆளுநருக்கு அழகா? எந்த ஆதாரத்தின் அடிப்படையில் ஊழல் என்று கூறுகின்றார்? வாய்க்கு வந்ததைப் பேசிடவும் எழுதிடவும் அவர் அட்ரஸ் இல்லாத ஆள் அல்லவே? கீழ்வெண்மணி தியாகிகள் மணிமண்டபத்தையும் கொச்சைப்படுத்தி இருக்கிறார் ஆளுநர். குடிசைகளுக்கு மத்தியில் கான்கிரீட் கட்டுமானம் கட்டி இருக்கிறார்களாம். இது தியாகிகள் மற்றும் ஏழைகளுக்கு இழைக்கப்பட்ட கேலிக்குரிய அவமானமாம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாள் நிலப்பிரபுத்துவ -ஜாதியவாத சக்திகளால் தீ வைத்துக்கொளுத்தப்பட்ட தியாகிகளை நினைவுகூரும் வகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் எழுப்பட்ட நினைவுச் சின்னம் அது. அத்தகைய கொடூர சம்பவத்தில் கொல்லப்பட்ட தியாகிகளைப் போற்றும் வகையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்தச் சின்னத்தை அமைத்துள்ளது. இதில் என்ன குறை கண்டார் ஆளுநர்? சுற்றிலும் இருக்கிற குடிசைகளை அகற்றச் சொல்கிறாரா?

அயோத்தியில் இப்போது ஆயிரம் கோடியில் கோயில் கட்டி இருக்கிறார்கள். அயோத்தி நகர் இப்போது எப்படி இருக்கிறது என்பதை ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு முறை அங்கு போய் பார்த்துவிட்டு திரும்பட்டுமே. உலகத் தலைவர்கள் வரும்போது குஜராத் மாநிலத்து ஏழைகளின் வாழ்விடங்களை பச்சை 'ஸ்கிரீன்' போட்டு மறைத்ததை இந்த நாட்டு மக்கள் இன்னும் மறக்கவில்லை. எந்தப் பணிக்காக வந்தாரோ, அதை விட்டு விட்டு அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி.

'தமிழ்நாடு என்று சொல்லக்கூடாது, தமிழகம் என்றுதான் சொல்ல வேண்டும்' என்றார் ஆளுநர். வரலாற்றில் காலம் காலமாக இருக்கும் பெயரை மாற்றும் அதிகாரத்தை இவருக்கு யார் கொடுத்தது என்று சொன்னதும், அதனைத் திரும்பப் பெற்றுக் கொண்டார் ஆளுநர். சில நாட்களுக்கு முன்னால், 'மகாத்மா காந்தியால் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை' என்றார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியதும், 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்று சொல்லி விட்டார்.

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக வந்த ஆர்.என்.ரவி அவர்கள், தமிழ்நாட்டின் நன்மைக்காக இதுவரை ஏதாவது செய்துள்ளாரா என்றால் இல்லை. தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒன்றிய பா.ஜ.க அரசிடம் இருந்து ஏதாவது திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறாரா என்றால் இல்லை. குடும்ப வேலையாக அடிக்கடி டெல்லி செல்லும் அவர், தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைக்காக எப்போதாவது டெல்லி சென்றுள்ளாரா என்றால் இல்லை. அவர்தான், சொந்தமாக எந்த நன்மையும் செய்யவில்லை. நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்யும் தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் உதவியாக இருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை. இடைஞ்சலாகவும், மாநிலத்துக்கு அதிக கெடுதல் செய்பவராகவும், கெடுதல் நினைப்பவராகவும் இருக்கிறார் ஆளுநர்.

ஆன்லைன் ரம்மி தடை சட்டமசோதாவுக்கு அனுமதி வழங்காமல் இழுத்தடித்தது முதல், ஊழல் மற்றும் நிதிமுறைகேடுகளில் சிக்கி கைதான சேலம் பல்கலைக் கழக துணைவேந்தரைக் காப்பாற்றும் நடவடிக்கைகள் வரை ஆளுநரின் அனைத்து நடவடிக்கைகளும் சர்ச்சைக்குரியதாக மட்டுமல்ல, சந்தேகத்துக்குரியதாகவும் அமைந்துள்ளன. தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்டமுன்வடிவுகளையும், உத்தரவுகளையும், கோப்புகளையும் பல மாத காலமாக ஊறுகாய்ப் பானையில் ஊற வைப்பதைப்போல கிண்டி மாளிகையில் ஊறவைத்துக் கொண்டு இருக்கிறார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, தமிழ்நாடு அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டோம். "ஆளுநர் என்பவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர். அவர் பெயரளவில்தான் மாநிலத்தின் தலைவராக இருக்கிறார். ஆளுநர் என்பவருக்கு அரசியல் சட்டப்படி சில அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்களை வைத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவைகள் சட்டமியற்றும் வழக்கமான பணிகளை முறியடித்துவிட முடியாது" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் உறுதியாகத் தெரிவித்தார்கள். அதன் பிறகும் ஏதோ அதிகாரம் பொருந்தியவராக, தன்னை மன்னரைப் போல நினைத்துக் கொண்டு ஆளுநர் ரவி செயல்பட்டு வருகிறார். ஆளுநராக இருந்து அரசியல் செய்வதை விடுத்து, நேரடியாக அவர் அரசியல் களத்துக்கு வரலாம். அவரது ஆசையை அகில இந்திய பா.ஜ.க தலைமை அனுமதி வழங்கலாம். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2024 மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, திமுக நாடாளுமன்ற மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக்குழு சார்பில், சிவகங்கை மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட சிவகங்கை புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று நடந்த ஆலோசனை ஆலோசனை கூட்டத்தில் புதுக்கோட்டை - சிவகங்கை மாவட்ட அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதையொட்டி

## இன்று அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அமைச்சர் பிரகலாத் ஜோஷி அழைப்பு



டெல்லி, ஜன. 30-

நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதை ஒட்டி இன்று அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அமைச்சர் பிரகலாத்ஜோஷி அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை, ஆண்டுதோறும் 3 முறை கூட்டத்தொடர் கூடுகிறது. இதில், பட்ஜெட் கூட்டத்தொடர் ஆண்டின் தொடக்கத்தில் நடக்கும். அதை தொடர்ந்து, மழைக்காலக் கூட்டத் தொடர் மற்றும் குளிர்காலக் கூட்டத்தொடர் ஆகியவை நடைபெறும். இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதால் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படாது. எனவே, இந்த ஆண்டின் பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்கி பிப்ரவரி 9-ம் தேதி வரை நடக்கிறது. இது ஆண்டின் முதல் கூட்டத் தொடர் என்பதால் நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றுவார்.

அதை தொடர்ந்து, பிப்ரவரி 1ம் தேதி நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2024-2025 நிதி ஆண்டுக்கான மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார். பின்னர், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் உள்ளிட்ட அலுவல்கள் 9-ம் தேதி வரை நடைபெறுகிறது. அதேசமயம், நாடாளுமன்ற மக்களவைக்கான தேர்தல் நெருங்குவதால் பட்ஜெட்டில் கவர்ச்சிகரமான அறிவிப்புகள் இடம்பெறலாம் என்று கருதப்படுகிறது. இந்நிலையில், நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதை ஒட்டி இன்று அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அமைச்சர் பிரகலாத்ஜோஷி அழைப்பு விடுத்துள்ளார். மத்திய இடைக்கால பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்கும் நிலையில் அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

### லோக்சபா தேர்தலுக்கு முன்பாக

## அடுத்த 7 நாட்களில் சிஏஏ சட்டம் அமல் மத்திய அமைச்சர் திடீர் அறிவிப்பு



கொல்கத்தா : ஜன. 30-

மேற்குவங்கம் மட்டுமல்ல நாடு முழுவதும் அடுத்த 7 நாட்களில் குடியுரிமை திருத்தச் சட்டம் அமலுக்கு கொண்டு வரப்படும் என்று மத்திய அமைச்சர் சாந்தனு தாக்கூர் தெரிவித்துள்ளார்.

லோக்சபா தேர்தல் அட்டவணை வெளியாக இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், மேற்குவங்க மாநிலம் தெற்கு பர்கானாசில் நடந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற மத்திய அமைச்சர் சாந்தனு தாக்கூர் பேசுகையில், 'கடந்த ஆண்டு டிசம்பரில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, குடியுரிமை திருத்தச் சட்டத்தை (சிஏஏ) அமல்படுத்தப்படும் என்றார்.

அதனால் அச்சட்டத்தை அமல்படுத்துவதை யாராலும் தடுக்க முடியாது. சிஏஏ குறித்து மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி மக்களை தவறாக வழிநடத்துகிறார். லோக்சபா தேர்தல் அறிவிப்புக்கு முன்பே குடியுரிமை திருத்த சட்டம் அமலுக்கு வரும். எனவே, நாடு முழுவதும் அடுத்த ஒரு வாரத்தில் குடியுரிமை திருத்தச் சட்டம் அமலுக்கு வரும்' என்றார். முன்னதாக கடந்த 2019ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட குடியுரிமை திருத்தப்பட்ட சட்டத்தின்படி, வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து வந்த முஸ்லிம் அல்லாதவர்கள் (இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பவுத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்கள்) சட்டவிரோத குடியேறியவர்களாக கருதப்பட மாட்டார்கள்.

அவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும். ஆனால் இந்த சட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாகவும், அரசியலமைப்பின் மதச்சார்பற்ற கொள்கைகளை மீறுவதாகவும் பலரும் விமர்சித்து வருகின்றனர். கடந்த 2020ம் ஆண்டில், சிஏஏவுக்கு எதிராக மேற்குவங்க அரசு தீர்மானம் நிறைவேற்றியது. அதேபோல் மேலும் சில மாநிலங்கள் சிஏஏவுக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றின. மேற்கு வங்கத்தில் சிஏஏ, என்பிஆர், என்ஆர்சி ஆகியவற்றை அனுமதிக்க மாட்டோம் என்று மம்தா பானர்ஜி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 230 நாட்களை கடந்த சிறை வாழ்க்கை

## அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 17-வது முறையாக நீட்டிப்பு







சென்னை : ஜன. 30-

அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவல் ஜனவரி 31-ம் தேதி வரை நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்ட வழக்கில் 2023 ஜூன் 14ல் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமலாக்கத் துறையினர் 3,000 பக்க குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்தனர். செந்தில் பாலாஜி மூன்று முறை தொடர்ந்த ஜாமீன் மனுக்களும் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன. மருத்துவ காரணங்களை கருத்தில் கொண்டு ஜாமீன் கோரப்பட்ட போதும் அவை நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டன.

இந்த நிலையில், இந்த வழக்கில் செந்தில் பாலஜியின் நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்ததால், புழல் சிறையிலிருந்து காணொலி காட்சி மூலம் நீதிபதி அல்லி முன்பாக ஆஜர்படுத்தப்பட்டார். இதையடுத்து செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை நாளை வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டார். இதன் மூலம் 17வது முறையாக நீதிமன்ற காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக இருவாரம், ஒரு வாரம் என நீட்டிக்கப்படும் நீதிமன்ற காவல் தற்போது இரு நாள்கள் மட்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் 230 நாட்களை கடந்தும் ஜாமீன் கிடைக்காமல் செந்தில் பாலாஜி சிறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே, ஜாமீன் கோரி அமைச்சர் செந்தில் பாலாஜி 2வது முறையாக சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இந்த ஜாமீன் மனு நீதிபதி ஆனந்த்வெங்கடேஷ் முன்பு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

## ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை பிஹாருக்குள் நுழைந்தது

கிஷன்கஞ்ச் : ஜன. 30,

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி மேற்கொண்டு வரும் இந்திய ஒற்றுமை நியாய யாத்திரை பிஹாருக்குள் நுழைந்தது. இந்திய ஒற்றுமை யாத்திரையின் இரண்டாம் கட்ட யாத்திரையான இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையை காங்கிரஸ் எம்பி ராகுல் காந்தி, கடந்த 14ம் தேதி மணிப்பூரில் தொடங்கினார். பல்வேறு மாநிலங்கள் வழியாக அஸ்ஸாம் வந்த அவரது யாத்திரை, பின்னர் மேற்கு வங்கத்திற்குள் நுழைந்தது. தற்போது மேற்கு வங்கத்தில் இருந்து பிஹாருக்குள் நுழைந்துள்ளது.

**தொண்டர்கள் உற்சாக வரவேற்பு**



பிஹாரின் கிஷன்கஞ்ச் மாவட்டத்துக்குள் நுழைந்த ராகுல் காந்தியின் பேருந்துக்கு உள்ளூர் மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ஏராளமான இளைஞர்கள் கைகளில் காங்கிரஸ் கொடியை ஏந்தியவாறு பேருந்தோடு உடன் வந்தனர்.

காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணியில் பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் இருந்து வந்த நிலையில், அவர் திடீரென நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாஜக அணிக்குச் சென்றுவிட்டார். அதோடு, இந்தியா கூட்டணி குறித்தும் அவர் கடுமையாக விமர்சித்திருந்தார். இந்த திடீர் அரசியல் திருப்பத்தை அடுத்து, ராகுல் காந்தி பிஹாருக்கு வந்துள்ளார்.

கிஷன்கஞ்சில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, "இந்த யாத்திரை எதற்காக என்று பலரும் கேட்கிறார்கள். ஆர்எஸ்எஸ்-பாஜக ஆகியவை சித்தாந்த ரீதியாக வெறுப்பை பரப்பி வருகின்றன. ஒரு மதம் மற்றொரு மதத்துக்கு எதிராக நிறுத்தப்படுகிறது. மக்கள் மத ரீதியாகவும், மொழி ரீதியாகவும், சாதி ரீதியாகவும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகவே, வெறுப்பு சந்தையில் அன்பு எனும் கடையை நாங்கள் திறந்துள்ளோம். நாட்டின் அரசியலில் மிகப் பெரிய தாக்கத்தை இந்த யாத்திரை நிகழ்த்தும். நாங்கள் புதிய கண்ணோட்டத்தை, சித்தாந்தத்தை வழங்கி உள்ளோம்" என தெரிவித்தார்.

ராகுல் காந்தியோடு வந்த காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், "இந்தியா கூட்டணியில் இருந்து நிதிஷ் குமார் வெளியேறியதால் எந்த பாதிப்பும் இல்லை. இவ்வாறு அணி மாறுவது நிதிஷ் குமாருக்கு வழக்கமானதுதான். நிதிஷ் குமார் அணி மாறியதன் பின்னணியில் பிரதமர் மோடி இருக்கிறார். தற்போது இந்த யாத்திரைக்கு மக்கள் அளித்து வரும் மிகப் பெரிய வரவேற்பை நீங்களே பார்க்கிறீர்கள். முதுகில் குத்திய நிதிஷ் குமாருக்கு மக்கள் தற்போது கிஷன்கஞ்ச் மக்கள் பதில் அளித்துள்ளார்கள்" எனத் தெரிவித்தார்.

கிஷன்கஞ்ச் மாவட்டம் இஸ்லாமியர்கள் அதிகம் உள்ள மாவட்டம் என்றும், காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு உள்ள மாவட்டம் என்றும் கூறப்படுகிறது. கடந்த 2020 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு முதல்முறையாக ராகுல் காந்தி பிஹாருக்கு வருகை தந்துள்ளார். கிஷன்கஞ்ச் நகரில் பேரணி மற்றும் பொதுக்கூட்டத்துக்கு காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்துள்ளது. இந்த யாத்திரை இன்று புர்னியா நகருக்குச் செல்ல உள்ளது. அங்கு நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் பங்கேற்க ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் யாதவ், சிபிஐ (எம்எல்) பொதுச் செயலாளர் திபங்கர் பட்டாச்சாரியா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிஹாரின் புர்னியா பொதுக்கூட்டத்துக்கப் பிறகு நாளை யாத்திரை மீண்டும் மேற்கு வங்கத்துக்குள் நுழைகிறது. அங்கு முர்ஷிதாபாத் நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தை அடுத்து யாத்திரை ஜார்க்கண்ட் மாநிலத்துக்குள் நுழைகிறது. அதனைத் தொடர்ந்து சத்தீஸ்கர், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் வழியாக மகாராஷ்டிராவுக்கு வருகிறது. மகாராஷ்டிராவின் மாலேகான், நாசிக், தானே வழியாக மும்பையில் யாத்திரை நிறைவடைய இருக்கிறது. இந்த யாத்திரை மொத்தம் 6,713 கிலோ மீட்டர் தொலைவும், 67 நாட்களும் கொண்டது. 15 மாநிலங்கள் வழியாகவும், 110 மாவட்டங்கள் வழியாகவும் இந்த யாத்திரை செல்ல உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று

# 30-1-2024

விருத்தாசலம் கொளஞ்சியப்பர் : நீதிமன்றம், வழக்கு பிரச்சனைகள் தீர்க்கும் திருத்தலம்.

சக வருடம் 1945 மாகம் 10

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது தை 16 | JAN - TUE செவ்வாய் | ரஜப் 18 தேய்பிறை 030 / 336 | இராசிபலன் |

தேய். சதுர்த்தி 02.59 (கா. 07.48) உத்திரம் 35.57 (மா. 08.59) தியாஜ் 58.53 அமிர்த 35.57 மேல் சித்த. ஸ்ரீதியாகபிரம்ம ஆராதனை. திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி பெருமான் கோவிலில் ஸ்ரீஆண்டாள் மூலவருக்கு திருமஞ்சன சேவை.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; மகர லக்கனம் இருப்பு நா. 2 வி. 32; சந்திராஷ்டமம் திருவோணம் அவிட்டம்; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.36

இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை

இராசிபலன்: மேஷம் - புகழ்; ரிஷபம் - ஆர்வம்; மிதுனம் - மேன்மை; கடகம் - நட்பு; சிம்மம் - பெருமை; கன்னி - களிப்பு; துலாம் - சாதனை; விருச்சி - உயர்வு; தனுசு - போட்டி; மகரம் - பொறுமை; கும்பம் - சிந்தனை; மீனம் - நிம்மதி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# உளுந்தூர்பேட்டை அருகே விபத்து தாய் மகள் பலி

கள்ளக்குறிச்சி : ஜன. 30-

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்த ஆசனூர் அருகே சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை கார் மீது தனியார் சொகுசு பேருந்து மோதி ஏற்பட்ட கோர விபத்தில் தாய் மகள் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.



இவ்விபத்தினால் ஆசனூரில் இருந்து எரஞ்சி வரை சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு கார், வேன், அரசு மற்றும் தனியார் பேருந்துகள், லாரிகள் என பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகின. இதில் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், ஒடுவம்பட்டி பகுதியைச் சேர்ந்த அழகுராஜா தனது குடும்பத்துடன் சென்னை நோக்கி காரில் சென்று கொண்டிருந்த போது ஆசனூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் வேலை நடைபெற்று வருவதால் போக்குவரத்து நெரிசலில் மெதுவாக சென்ற பொழுது பின்னால் வந்த தனியார் சொகுசு பேருந்து ஓட்டுனரின் கவன குறைவினால் கார் மீது மோதிய விபத்தில் மனைவி ஜெயா 40, மகள் வசந்தி 18, ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் சொகுசு பேருந்து ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து சாலையோர பள்ளத்தில் இறங்கியதால் பேருந்து ஓட்டுனர் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பகுதியை சேர்ந்த லோகு மற்றும் பயணம் செய்த 20-க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் உயிர்த்தப்பினர். இத்தகவலறிந்த எடைக்கல் காவல் நிலைய காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயிரிழந்தவர்களின் உடல்களை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், மேலும் படுகாயம் அடைந்தவர்களை ஆம்புலன்ஸ் மூலம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர.

இப்பகுதியில் சமீப காலமாக அடிக்கடி விபத்து ஏற்பட்டு உயிர் சேதங்கள் ஏற்படுவதற்கு மேம்பாலம் பணி தாமதம் ஆகுவதாலும் மேலும் வாகனங்கள் செல்ல சாலை மிகவும் குறுகலாகவும் இருப்பதாக இப்பகுதி மக்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் தெரிவிக்கின்றனர். எனவே பாலம் வேலை முடியும் வரை சாலையை அகலப்படுத்தி போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு சரி செய்ய வேண்டுமென வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

# புதுக்கோட்டையில் இந்திய மருத்துவ சங்கம் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும் கிளை சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டு

புதுக்கோட்டை, ஜன. 30-

புதுக்கோட்டையில் இந்திய மருத்துவ சங்கம் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும் கிளை சங்க நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா எம்.ஏ. கிராண்டில் நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு தலைவர் வி.ராமமூர்த்தி தலைமை தாங்கினர். முன்னாள் தலைவர் சுவாமிநாதன் முன்னிலை வகித்தார். செயலாளர் முகமதுசுல்த்தான் அனைவரையும் வரவேற்றார். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு மாநிலக் கிளை 2025 தேர்வு தலைவர் டாக்டர் செங்குட்டுவன், புதிய நிர்வாகிகள் புதுக்கோட்டை கிளை 2024-2025 தலைவராக டாக்டர் முகமது சுல்தான், செயலாளராக டாக்டர் ராஜா, நிதிச் செயலாளராக டாக்டர் கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து வாழ்த்தி பேசினார்.

விழாவில் எலும்பு முறிவு பிரிவு சிறப்பு மருத்துவர் டாக்டர் ரவிக்குமார், பொது மருத்துவம் பிரிவு டாக்டர் ராமநாதன், மயக்கவியல் பிரிவு டாக்டர் சுரேஷ்குமார், தோல் பிரிவு டாக்டர் கிருஷ்ணராஜ், கண் பிரிவு டாக்டர் சுப்புராமன், குழந்தைகள் பிரிவு டாக்டர் அப்துல் லத்தீப், காது மூக்கு தொண்டை பிரிவு ஆறுமுகம், தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்க தலைவர் டாக்டர் சலீம் அப்துல் குத்தூஸ், பொதுச் செயலாளர் பெரியசாமி, செட்டிநாடு சங்க நிதி செயலாளர் நடேசன், அறந்தாங்கி சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன் மற்றும் செயலாளர் பழனிவேல் ராஜன் ஆகியோருக்கு சிறப்பான செயல்பாடுகளை பாராட்டி இந்திய மருத்துவ சங்க தமிழ்நாடு மாநில கிளை 2026 தேர்வு டாக்டர் ஸ்ரீதர் கௌரவ விருதுகளை வழங்கி வாழ்த்தினர்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் டாக்டர் முத்துராஜா கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளை வாழ்த்தி பேசினார். அவர் பேசுகையில் இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளை சிறப்பாக செயல்பட்டு வருகின்றது சமூக சேவைகள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தி உள்ளனர், தொடர்ந்து சிறப்புடன் செயல்பட வாழ்த்துகிறேன் என்று கூறினார். விழா நிறைவாக டாக்டர் அகமது மர்சூக் நன்றி கூறினார். விழாவில் மூத்த மருத்துவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சிவகிரியில் தமிழ் சங்க தொடக்க விழாவில்



சிவகிரி : ஜன. 30-

தென்காசி மாவட்டம், சிவகிரியில் தமிழ் சங்கம் தொடக்கவிழா பாரத்மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தலைவர் மருத்துவர் செ.சு. செண்பக விநாயகம் தலைமையில், செயலாளர் ப. திருப்பதி ராஜன் வரவேற்புரையாற்றினார். தமிழிசை தளவை, இளங்குமரன், மறைந்த மருத்துவர் கு.சாந்தி, சரவணபாய், தங்கமுத்து ஆகியோர் படங்களை புதுக்கோட்டை கவிஞர் கவிதை பித்தன், வடக்கு சத்திரம் ஆசிரியர் வைரவன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் தமிழ் சங்கத்திற்காக சாந்தி சரவணபாய், தங்கமுத்து குடும்பத்தினரால் ரூ. 10,000 நிதி வழங்கப்பட்டு வைப்பு நிதியாக தொடங்கி வைக்கப்பட்டது. நிகழ்ச்சியை ஆ. நெடுஞ்சேரலாதன் ஒருங்கிணைத்தார். கே.டி.சிச. குருசாமி, வாசுதேவநல்லூர் சந்திரன் வாழ்த்துரையாற்றினர். பண்டைய தமிழரவு மன்ற இயக்குனர், தமிழ் பணி இதழ் ஆசிரியர், தமிழ் மாமணி, வா.மு.சே. திருவள்ளுவர் கருத்துரையும், புதுக்கோட்டை கவிஞர் கவிதை பித்தன் தன்மானத்துடன் தமிழ் மொழி இனம்காப்போம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார், புலவர் மு.கணேசன், அறங்காவலர்கள் வழக்கறிஞர் ப. மருதப்பன், திருச்சி கணேசன் ஆகியோர் தமிழ் சங்கத்திற்காக நிதி வழங்கி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பொன்பேத்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு முன்னாள் மாணவர் 50,000 மதிப்புள்ள மேசை, சேர் வழங்கினார்

**ஆவுடையார்கோவில் : ஜன. 30**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் அருகே பொன்பேத்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு முன்னாள் மாணவர் 50,000 மதிப்புள்ள மேசை, சேர் வழங்கினார்.



ஆவுடையார்கோவில் ஒன்றியத்துக்குட்பட்ட பொன்பேத்தி ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் சுமார் 270 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். அப்பள்ளியில் முன்னாள் மாணவரும் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் பொன் துரை, பள்ளிக்குத் தேவையான சுமார் 50,000 மதிப்புள்ள சேர், மேசை பொருட்களை பள்ளி தலைமை ஆசிரியரிடம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வள்ளால மோகன். முன்னாள் மாணவர்கள் மாரிமுத்து, வடிவேல் தலைமை ஆசிரியர் பொறுப்பு சண்முகநாதன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# ஜெயங்கொண்டத்தில் லயன்ஸ் சங்கத்தின் வெள்ளி விழா மண்டல சந்திப்பு

அரியலூர், ஜன. 30,

ஜெயங்கொண்டத்தில் லயன்ஸ் சங்கத்தின் வெள்ளி விழா மண்டல சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் பன்னாட்டு லயன்ஸ் சங்கங்களின் மண்டலம் 9-ன், 25-வது வெள்ளி விழா மண்டல சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, மண்டல தலைவர் முருகானந்தம் தலைமை தாங்கினார். லயன்ஸ் சங்க மாவட்ட ஆளுநர் இமயவரம்பன் மாநாட்டை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் விருந்தினராக முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு சிறப்புரையாற்றி பேசினார்.

லயன்ஸ் மாவட்டத் தலைவர் ராஜன், சாசன தலைவர் டாக்டர் கருப்பையா, செயலாளர் ரமேஷ்குமார், பொருளாளர் வினோத்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். முன்னதாக லயன்ஸ் சங்க செயலாளர் அஸ்வந்த்ராஜா வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் முத்துக்குமரன், ஜெயங்கொண்டம் சோழன் சிட்டி லயன்ஸ் சங்க தலைவர் ராஜேஷ்குமார், அரிமா சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

# மழையூர் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக விழா



கறம்பக்குடி : ஜன. 30-

கறம்பக்குடி அருகே மழையூரில் பழமைவாய்ந்த ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே மழையூரில் பிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் உள்ளது. இந்த கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்தன. கோயில் திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு யாக சாலைகள் அமைக்கப்பட்டு புனித நீர் குடங்கள் வைக்கப்பட்டு மஹா கணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு சித்தி விநாயகர் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

அதனை தொடர்ந்து நேற்று யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீரை சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்தவாறு மேளதாளங்கள் முழங்க கோயிலை சுற்றி வலம் வந்து கருட பகவான் வானில் வட்டமிட சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தில் புனித நீரானது ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து சுவாமி ஸ்ரீ சித்தி விநாயகருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை தொடர்ந்து நடைபெற்றது. பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். மழையூர் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## குளமங்கலம் அய்யனார் கோயிலில் திருப்பணி

# குதிரை சிலைக்கு மாலை அணிவிக்காமல் திருவிழா நடத்த முடிவு

*ஆலங்குடி : ஜன. 30-*

*ஆலங்குடி அருகேயுள்ள புகழ்பெற்ற குளமங்கலம் பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோயிலில் திருப்பணிகள் நடைபெறுவதால், மாசிமகத்தில்நடைபெறும் திருவிழாவில் குதிரை சிலைக்கு மாலை அணிவிக்காமல் திருவிழா நடத்த கோயில் நிர்வாகத்தினர் முடிவு செய்துள்ளனர்.*



*புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள குளமங்கலத்தில் புகழ்பெற்ற பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோயில் உள்ளது. இக்கோயில் முன்பு உள்ள 33 அடி உயர பிரமாண்ட குதிரை சிலைக்கு மாசிமகத்தில் நடைபெறும் திருவிழாவின்போது, அந்த குதிரை சிலையின் உயரத்திற்கே காகிதம், பூ மாலைகளை வாகனங்களில் எடுத்து வந்து ஏராளமானோர் அணிவித்து வேண்டுதல் நிறைவேற்றுவர். கடந்த ஆண்டு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாலைகள் அணிவிக்கப்பட்டன.*

*இந்நிலையில், தற்போது கோயிலில் திருப்பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. நிகழாண்டு திருவிழா நடத்துவது குறித்து குளமங்கலத்தில் கிராமத்தினர், கோயில் நிர்வாகத்தினர் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், பிப்.24-ல் நடைபெறும் திருவிழாவில், திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், பொதுமக்கள் குதிரை சிலைக்கு மாலை அணிவிப்பதை தவிர்க்க வேண்டும். மற்றபடி இரு தினங்களும் திருவிழா சிறப்பு அபிஷேக ஆராதனைகள், கலைநிகழ்ச்சிகள், அன்னதானம் ஆகியவை வழக்கம் போல் நடைபெறும். மாலை அணிவிக்கவிரும்புவோர் திருப்பணிக்கு நன்கொடை வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.*

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு டிட்டோ-ஜாக் மாநிலம் தழுவிய மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம்

தென்காசி : ஜன. 30,

தென்காசி மாவட்டம், தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பாக தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு டிட்டோ-ஜாக் மாநிலம் தழுவிய மாபெரும் உண்ணாவிரதம் போராட்டம் நடைபெற்றது.



போராட்டத்தை ராஜேந்திரன், சா.செய்யது இப்ராஹிம் மூஸா, மாரிமுத்து, ஆகியோர் தலைமையில் உண்ணாவிரதத்தை தொடங்கி வைத்தனர். தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர் ச.மயில் மற்றும் டிட்டோ- ஜாக் உயர்மட்ட குழு உறுப்பினர் விளக்க உரையாற்றினர். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் அ. ஆரோக்கிய ராசு, மாவட்டச் செயலாளர் சையது இப்ராஹிம் மூஸா, மாவட்ட பொருளாளர் ஞா.ஸ்டீபன் சேவியர் ஞானம், தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் செ.ரமேஷ், மாவட்ட செயலாளர் க.மாரிமுத்து, மாநில செயற்குழு உறுப்பினர் லட்சுமி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் சண்முகநாதன், பிரிவு மாவட்டத் தலைவர் ஆறுமுகசாமி, மாவட்ட செயலாளர் க.கனகராஜ், மாவட்ட பொருளாளர் அருள்ராஜா கருத்துரை வழங்கினர்.

மாநில துணைத்தலைவர் பி.சதீஷ், மாநில செயலாளர் பட்டதாரி ஆசிரியர் கழகம் பிச்சைக்கனி, மாநில செயற்குழு உறுப்பினர் செ.மருதுபாண்டியன், பி.இராஜ்குமார், துரைசிங், கு.மாரியப்பன், வீ. சண்முகசுந்தரம், பி.கே.மாடசாமி, வீ.ராமர், கே. கண்ணன், முருகேஷ், ஆர். சங்கரி ஆகியோர் கலந்து கொண்டு இடைநிலை ஆசிரியருக்கு மத்திய அரசுக்கு இணையாக ஊதியம் மூன்று நபர் குழு மூலம் தீர்வு காணுதல், 12-10-2023 அன்று பள்ளி கல்வித்துறை அமைச்சர் ஒப்புக்கொண்ட 12 கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி, உயர் கல்வி பின்னேர்ப்பு அனுமதி, 2019 ஜாக்டோ ஜியோ போராட்ட வழக்கு நிலுவை குற்றச்சாட்டுகளை ரத்து செய்தல் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. நிறைவாக மாநில பொருளாளர் தியாகராஜன், தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மற்றும் டிட்டோ-ஜாக் உயர்மட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.



▶ கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி அலுவலகத்தில் இந்திய திரு நாட்டின் 75 வது குடியரசு தின விழாவில் பேரூராட்சி மன்ற தலைவர் கணேசமூர்த்தி தேசியக்கொடி ஏற்றி உறுதிமொழி எடுத்துக்கொண்டு அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடினார் இந்நிகழ்வில் துனைத் தலைவர், மகேஸ்வரி மாறன் செயல் அலுவலர் தங்கவேல், ஆய்வாளர் துரைராஜ் வார்டு உறுப்பினர்கள் சொர்ணம் அறிவழகன் மற்றும் துப்புரவு பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# ஜெயங்கொண்டத்தில் பாமக மாணவர் சங்க செயற்குழு கூட்டம்

அரியலூர் : ஜன. 30,

ஜெயங்கொண்டத்தில், பாமக மாணவர் சங்க செயற்குழு கூட்டம் நடைபெற்றது.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் மங்களம் மஹால் திருமண மண்டபத்தில் பாட்டாளி மக்கள் கட்சி மாணவர் சங்கத்தின், அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், மாநில மாணவர் சங்க செயலாளர் கொடுக்கூர் எஸ்.ஆர். ஆளவந்தார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பாமக ஜெயங்கொண்டம் நகர செயலாளர் பரசுராமன், பாட்டாளி மாணவர் சங்க நிர்வாகிகள் மணிகண்டன், ரமேஷ், வெங்கடேஷ், சூரக்குழி கார்த்திகேயன், ரமேஷ் குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மாணவர் சங்க செயலாளர் மோகன்ராஜ் வரவேற்று பேசினார்.

பாட்டாளி மக்கள் கட்சி சமூக நீதிப்பேரவையின் மாநில செயலாளர் மற்றும் கட்சியின் அரியலூர், பெரம்பலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பாலு, பாமக மாநில மாணவரணி துணை செயலாளர் டிஎம்டி திருமாவளவன், மாநில மாணவர் சங்க தலைவர் கோபிநாத், மாநில மாணவர் சங்க செயலாளர் கீர்த்தி உள்ளிட்டோர் பேசினார்கள். வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் தர்ம பிரகாஷ், செந்தில், அய்யாதுரை, தங்கப்பிரகாசம், ஒன்றிய செயலாளர் தங்க செம்மலை உள்பட, பாமக மற்றும் வன்னியர் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஜெயங்கொண்டம் நகர பாமக மாணவர் சங்க செயலாளர் நெடுமாறன் நன்றி கூறினார்.

30.01.2024 ❖ வரலாறு

# முன்னாள் எம்எல்ஏ முன்பு அதிமுகவில் இணைந்த மாற்றுக்கட்சியினர்



சீர்காழி, ஜன, 30-

சீர்காழியில் திமுக, பாஜக, தேமுதிக உள்ளிட்ட மாற்றுக் கட்சி நிர்வாகிகள் 120 பேர் அதிமுக மாவட்ட செயலாளர் எஸ். பவுன்ராஜ் தலைமையில் அதிமுகவில் இணைந்தனர் :

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஆயர்பாடி அரங்கில் அதிமுக நிர்வாகி மார்கோனி ஏற்பாட்டில் நகராட்சிக்கு உட்பட்ட 8 மற்றும் 9வது வார்டு மாற்றுக்கட்சி நிர்வாகிகள் அதிமுகவில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் அதிமுக மாவட்டசெயலாளர் எஸ். பவுன்ராஜ் தலைமையில் திமுக, பாஜக, தேமுதிக உள்ளிட்ட பிறகட்சிகளை சேர்ந்த 120 பேர் தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர்.

கட்சியில் இணைந்த அனைவருக்கும் மாவட்ட செயலாளர் எஸ் .பவுன்ராஜ் கழகத் துண்டினை அணிவித்து அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சந்திரமோகன் , ஒன்றிய செயலாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிமுக கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய மோரை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது




திருவள்ளூர் , ஜன, 30-

75வது குடியரசு தினத்தை முன்னிட்டு மோரை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் வீரபுரம் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது.

மோரை ஊராட்சி மன்ற தலைவர் ஆர். திவாகரன் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி குறித்து விவாதித்தல் கிராம ஊராட்சியில் தணிக்கை அறிக்கை குறித்து விவாதித்தல் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல் மக்கள் திட்டமிடுதல் இயக்கம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சி திட்டம் குறித்து விவாதித்தல் தூய்மை பாரத இயக்கம் விவாதித்தல் ஜல் ஜீவன் இயக்கம் குறித்து விவாதித்தல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் பிரதமர் மந்திரி ஜன் ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியன் பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இதர பொருள் குறித்து விவாதித்தல் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாவட்ட கவுன்சிலர் எம். சதீஷ்குமார், இசைவாணி நவராஜ் ஒன்றிய கவுன்சிலர், துணைத் தலைவர் வி கார்த்திக் மற்றும் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலர் எஸ். உமா பார்வதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தனியார் பள்ளி விளையாட்டு போட்டிகள் தொடக்க விழா




சீர்காழி. ஜன, 30-

சீர்காழியில் தனியார் பள்ளி விளையாட்டு விழாவில் இந்திய அணி கைப்பந்தாட்ட வீரர் கலந்துகொண்டு பரிசுகள் வழங்கி மாணவர்களை வளர்ப்பது குறித்து பெற்றோருக்கு அறிவுரை வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தனியார் சிபிஎஸ்சி பள்ளி இயங்கி வருகிறது.

இப்பள்ளியில் 14 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக அண்ணாமலை பல்கலைக்கழக உடற்கல்வித்துறை உதவி பேராசிரியர் கார்த்திகேயன் மற்றும் இந்திய கைப்பந்தாட்ட அணிவீரர் கார்த்திகேயன் கலந்து கொண்டு போட்டியில்வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கினார்.

முன்னதாக சிறப்பு அழைப்பாளருக்கு மாணவ மாணவிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர், மேலும் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் பள்ளி தாளாளர், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் போது மேடையில் பேசிய இந்திய கைப்பந்தாட்ட வீரர் கார்த்திகேயன் கூறுகையில் : மாணவர்களை வளர்ப்பதில் முக்கிய பங்கு பெற்றோருக்கும் உண்டு, மாணவ மாணவிகளை சிறு வயது முதலே விளையாட்டில் ஆர்வமுடன் வளர்ப்பதன் மூலம் அவர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் வலுப்பெறுவர், தற்போது மாறிவரும் உணவு பழக்க வழக்கத்தால் மாணவர்களின் உடல்நிலை பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே உடலுக்கு ஆரோக்கியத்தை தரக்கூடிய உணவுகளை மட்டுமே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறு வயது முதலே கொடுத்து வளர்க்க வேண்டும் என பெற்றோருக்கு அறிவுரைகளை வழங்கினார்.



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் 75வது ஆண்டு குடியரசு தின விழாவை கொண்டாடியது. பார் கவுன்சில் தலைவர் பி.எஸ் அமல்ராஜ் துவக்கி வைத்து தேசிய கொடி ஏற்றி அனைவருக்கும் வாழ்த்துகள் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் துணைத்தலைவர் வி.கார்த்திகேயன்,உயர் நீதி மன்ற தலைவர் .ஜி.மோகனகிருஷ்ணன், இணைத்தலைவர், ஜெ.பிரிசில்லா பாண்டியன், செயற்குழு தலைவர் தலைமுத்துராசு, உறுப்பினர், தலைவர் மற்றும் செயலாளர்கள் மற்றும் குடியரசு தின விழாவில் பல்வேறு வழக்கறிஞர்கள்,வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் பிற முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.



சென்னை, மாதவரம் தொகுதிக்கு உட்பட்ட, மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 75 வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. குடியரசு தின விழாவில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் முன்பு சுதந்திர கொடியை வட்டாட்சியர் வெங்கடாஜலபதி கொடியேற்றி வைத்தார். உடன் துணை வட்டாட்சியர் வனிதா மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பங்கேற்று கொடிக்கு மரியாதை செலுத்தினர், வந்திருந்த அனைவருக்கும் காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.



பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட மாதவரம் மண்டலம் 3 அலுவலக வளாகத்தில் 75 வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால் கொடியேற்றி கொடிக்கு மரியாதை செலுத்தினர். உடன் மண்டல அலுவலர் சின்னதுரை, செயற்பொறியாளர் கார்த்திகேயன், உதவி செயற்பொறியாளர்கள் தேவராஜ், முத்தமிழ்செல்வன், உதவி பொறியாளர்கள் சரவணமூர்த்தி, குமார், மற்றும் அலுவலர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். வருகை தந்த அனைவரும் காலை உணவு இனிப்புகள் வழங்கப்பட்டது.



காரைக்கால் புதிய பேருந்து நிலையம் முன் பல பார்வையாளர்கள் மத்தியில் புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகத்தின் உயர்மட்டக்குழு உறுப்பினர் கே.எஸ். கணபதி சுப்பிரமணியன் தலைமையில் மற்றும் இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் மாநில தலைவர் டாக்டர். எஸ். ஆனந்த்குமார் முன்னிலையில் இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்த 14 வது தேசிய வாக்காளர் தினத்தை அனுசரிக்கும் விதமாக "ஓட்டுக்கு லஞ்சம் வாங்க மாட்டோம்" என்று துண்டுப்பிரசுரம் விநியோகித்து, அதற்கான உறுதி மொழி படிவத்தில் கையெழுத்து இயக்கம் நடத்தி பொதுமக்களிடையே பரப்புரை செய்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் மதியழகன் மற்றும் நிர்வாகிகள் ஆதரவளித்தனர். மேலும், பெண்கள், டாடா மேஜிக் ஓட்டுநர் சங்கம் மற்றும் ஐக்கிய விவசாயிகள் கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள், இயக்கத் தன்னார்வலர்கள் பலர் கலந்துகொண்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# கொருக்குப்பேட்டையில் தைபூசம் விழா, 2ஆயிரம் பேருக்கு அன்னதானம், நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டது



சென்னை, ஜன,30

சென்னை கொருக்குப்பேட்டை பாரதி நகர் திருமால் முருகன் திருக்கோயிலின் 18ம் ஆண்டு தைப்பூச விழாவை முன்னிட்டு கொருக்குப்பேட்டை ஜீவா நகர் ஸ்ரீ சூலகந்த விநாயகர் ஆலயத்தின் சார்பாக 2000 நபர்களுக்கு சமபந்தி அன்னதான நிகழ்ச்சியும் மற்றும் 111 நபர்களுக்கு புடவை, தண்ணீர் குடம் நலத்திட்ட உதவி செய்யும் விழா நடைபெற்றது .

இந்த விழாவில் அன்னதானத்தை சென்னை பாலி பேக் பிரைவேட் லிமிடெட் நிறுவனர் கே பி நாகராஜ், ராஜராஜேஸ்வரி, நந்தகுமார், வழக்கறிஞர் முத்துப்பாண்டி, ஆகியோர் அன்னதானத்தையும் நலத்திட்ட உதவியை பொது மக்களுக்கு கொடுத்து தொடங்கி வைத்தனர் .

மேலும் இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சென்னை வண்ணாரப்பேட்டை உதவி கமிஷனர் சதாசிவம் மற்றும் கவுன்சிலர் மணிமேகலை ஏழுமலை, ஏழுமலை, கே ராஜேந்திரன், லட்சுமி, எம் செந்தில்குமார், ஆர் ஜெகன் ,ஆர் எம் டி தனசேகர் ,கே ராஜேந்திரன், எஸ் ஏ வீரா, டாக்டர் அமுதம், குருமூர்த்தி ஐ என் ஏ, குமார் ,டி பிச்சைமணி, வி ராம்குமார் ,க.முத்து கணேஷ், கே பாபுசுப்பிரமணி, சுந்தரேசன், தா சீனிவாசன், சீனிவாசன், மாரியப்பன், சண்முகம், பாலாஜி, கண்ணன், பழனிச்சாமி, சுரேஷ், வழக்கறிஞர் மணிகண்டன், வழக்கறிஞர் மகேஷ், பூஜா மொபைல்ஸ், சம்சுதீன், பி கார்த்திக், சிறப்பு அழைப்பாளராக லயன் டீ சந்திரமோகன், பி ராம்குமார், எஸ். இக்பால், எம் லோகேஸ்வரன், பி ராஜா ,எஸ் மணிகண்டன், எம். மூர்த்தி ,செய்யது இப்ராஹிம், எஸ் மகேஸ்வரன், எம் விமல்குமார், கே செல்வம், வழக்கறிஞர் அசாருதீன், சரவணன்,நித்தியானந்தம்,ஜெயக்குமார், மற்றும் பாரதி மக்கள் பொது நல இயக்கம் பாரதி நகர் இளைஞர்கள், மாதர்கள், மகளிர்கள் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு இந்த விழாவை சிறப்பித்தனர் இந்த அன்னதான விழாவை ஏற்பாடு செய்தவர்கள் பி மணிவண்ணன், ஜி தனசேகர், ஜி சீனிவாசன், எஸ் காதர் உசேன், என் கணேசன் மற்றும் வழக்கறிஞர் அஜித் குமார் ஆகியோர் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் விழாவை திறம்பட செய்தனர்.

# பரமன்கேணி ஊராட்சியில் குடியரசு தின விழா



செய்யூர், ஜன-30

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பரமன் கேணி ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் க.சித்ரா - கமலக்கண்ணன் தலைமையிலும், பற்றாளர் பி. செந்தில்நாதன் முன்னிலையிலும் மூவர்ணக் கொடியேற்றி குடியரசு தின விழாவில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

உடன் துணைத் தலைவர்சசிகலாஏழுமலை ஊராட்சி செயலர் பாண்டியன், வார்டு உறுப்பினர்கள், திட்ட ஒருங்கிணைப்பாளர், மேல்நிலை நீர் தேக்க தொட்டி இயக்குபவர்கள்,தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் என பெரும்பாலானோர் கலந்துகொண்டு குடியரசு தின விழா கிராம சபை கூட்டம் சிறப்பான முறையில் நிறைவு பெற்றது.

# இலத்தூர் ஊராட்சியில் குடியரசு தின கிராம சபை கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கிய ஊராட்சி மன்ற தலைவர்



செய்யூர், ஜன-30

செங்கல்பட்டு மாவட்டம்,இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய இலத்தூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் எல். என்.குமாரி நாகராஜன் தலைமையிலும் பற்றாளர் முன்னிலையில் குடியரசு தின கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி செயலாளர், திட்ட ஒருங்கிணைப்பாளர், தூய்மை பணியாளர்கள் மற்றும்தூய்மைகாவலர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் இவ்வூராட்சியில் பல ஆண்டு காலமாக பட்டா பெறுவதற்கு வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த கிராம மக்களுக்கு பலவித இன்னல்களை தாண்டி இந்திய நாட்டின் 75-வது குடியரசு தினத்தன்று இலத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இந்திய நாட்டின் மூவர்ணக் கொடியை ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார்.

அதில் கூறுவதாவது இலத்தூர் ஊராட்சியில் பல ஆண்டுகளாக வீடு கட்டுவதற்கு பட்டா இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த ஆதி திராவிட மக்களுக்கு 18 குடும்பங்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர் எல்.என்.குமாரி நாகராஜன் இலவச வீட்டுமனை பட்டாவை வழங்கினார்.

இதனை பொதுமக்கள் அனைவரும் ஊராட்சி மன்ற தலைவரை வெகுவாக பாராட்டினர் பாராட்டுக்களை பெற்றாலும் ஊராட்சி மன்ற தலைவர் இன்னும் நமது கிராமத்திற்கு அதிகஅளவில் உங்களுக்கு சேவைகள் செய்து கொடுக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம். ஆகவே உங்களுடைய ஒத்துழைப்பை தாருங்கள் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க கிராம மக்கள் மகிழ்ச்சியுடன் குடியரசு தின கிராம சபை கூட்டம் நிறைவு பெற்றது.

# கொருக்குப்பேட்டையில் 74 லட்ச ரூபாய் செலவில் அங்கன்வாடி மையம் விளையாட்டு திடல், நவீன உடற்பயிற்சி கூடம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது



சென்னை, ஜன. 30

சென்னை கொருக்குப்பேட்டை மீனாம்பாள் நகர் பகுதியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் ஆர்கே நகர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி 74 லட்ச ரூபாய் செலவில் விளையாட்டு திடல் அங்கன்வாடி மையம் உடற்பயிற்சி கூடம் என பல்நோக்கு கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

கொருக்குப்பேட்டை மீனாம்பாள் நகர் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் ட கலாநிதி வீராசாமி ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபிநேசர் பூமி பூஜை போட்டு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தனர் இதனையடுத்து கொருக்குப்பேட்டை அம்பேத்கர். நகர் 4 வது தெருவில் பழுதடைந்த உடற்பயிற்சி கூடம் மட்டும் இருந்த நிலையில் உடற்பயிற்சி உபகரணங்களுக்கு பாதுகாப்பில்லாத சூழ்நிலை இருப்பதினால் உடற்பயிற்சி கூடத்தை சீரமைத்து தரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசரிடம் கோரிக்கை வைத்தனர்

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை ஏற்று ஆர்கே சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 49 லட்சம் ரூபாய் செலவில் நிதி ஒதுக்கப்பட்டு குழந்தைகள் அங்கன்வாடி மையம், விளையாட்டுத் திடல், நவீன உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கான பணிகள் பூஜைகள் போட்டு பணிகளை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் நான்காவது மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன், பகுதி செயலாளர்கள் ஜெபதாஸ் பாண்டியன்,லட்சுமணன் மாமன்ற உறுப்பினர் மணிமேகலை, வட்ட செயலாளர் ஏழுமலை, விமலா உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பொறையார் நிவேதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா



தரங்கம்பாடி, ஜன.30-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா பொறையாரில் நிவேதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 21 ஆம் ஆண்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளியின் தாளாளர் லெட்சுமி முருகன் தலைமை வகித்தார், எம்எல்ஏ நிவேதா முருகன் முன்னிலை வகித்தார், பள்ளி முதல்வரும், தரங்கைப் பேரூராட்சி மன்ற தலைவருமான சுகுண சங்கரி குமரவேல் வரவேற்றார்.

இதில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, திரைப்பட இயக்குனரும், நடிகருமான கரு. பழனியப்பன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டி பேசினர்.

தொடர்ந்து மாணவர்கள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிகழ்ச்சியில் செம்பை ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர் தரங்கை பேராயர் மாணிக்கம் லுத்தரன் கல்லூரி முதல்வர் ஜான்சன் ஜெயக்குமார், பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலகண்ணன், திமுக ஒன்றிய செயலாளர்கள் அப்துல் மாலிக், அமுர்த விஜயகுமார், தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# "உங்களுடன் போட்டியிடுங்கள் ; மற்றவர்களுடன் அல்ல" தேர்வெழுதும் மாணவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை



புதுடெல்லி : ஜன. 30, உங்களுடன்நீங்கள்போட்டியிட வேண்டும்; மற்றவர்களுடன் அல்ல என்று தேர்வெழுதும் மாணவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அறிவுரை வழங்கி உள்ளார்.

தேர்வெழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோருடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். நாட்டின் பல பகுதிகளிலும் இந்த நிகழ்ச்சி ஒளிரபரப்பப்பட்டது. அவற்றில் ஏராளமான மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "தங்கள் பிள்ளைகளின் ரிப்போர்ட் கார்டை (மதிப்பெண் அட்டை), அவர்களின் விசிட்டிங் கார்டு என பெற்றோர்கள் கருதக் கூடாது. தங்கள் பிள்ளைகளை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பேசக் கூடாது. அவ்வாறு ஒப்பிடுவது அவர்களின் எதிர்காலத்துக்கு தீங்கு விளைவிப்பதாக அமைந்துவிடும்.

மாணவர்கள் தங்களிடமே தாங்கள் போட்டியிட வேண்டும்; மற்றவர்களுடன் அல்ல. மாணவர்கள் மூன்று விதமான அழுத்தங்களுக்கு உள்ளாகிறார்கள். ஒன்று, சக மாணவர்கள் மூலமாக ஏற்படுவது. இரண்டாவது, பெற்றோர் மூலமாக ஏற்படுவது. மூன்றாவது, சுயமாக ஏற்படுவது. தாங்கள் எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கவில்லை என்றால், மாணவர்கள் தங்களைத் தாங்களே நொந்துகொள்கிறார்கள். தேர்வுக்குத் தயாராகும்போது சிறிய இலக்குகளை நிர்ணயித்து படிப்படியாக செயல்திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு செயல்பட்டால் தேர்வுக்கு முன்பே நீங்கள் முழுமையாக தயாராகிவிடுவீர்கள்.

இன்று (ஜன. 29) நடைபெறும் இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி 7-வது ஆண்டு நிகழ்ச்சி. இதற்கு முந்தைய ஆண்டுகளில் மாணவர்கள் எதிர்கொண்ட அதே காலகட்டத்தைத்தான் நீங்கள் தற்போது எதிர்கொள்கிறீர்கள். திட்டமிட்டு செயல்பட்டால் உங்களால் இலக்கை அடைய முடியும். இன்றைய மாணவர்கள்தான் நாளைய இந்தியாவை வடிவமைக்கப் போகிறவர்கள். இன்றைய மாணவர்கள் முன் எப்போதையும்விட புதுமைகளை அதிகம் கொண்டிருக்கிறார்கள்" எனத் தெரிவித்தார். இந்த ஆண்டு இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள 2.26 கோடி பேர் பதிவு செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### இன்று முதல் அனைத்து போக்குவரத்து கழகத்தை சேர்ந்த

# 710 பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கம் : அமைச்சர் சிவசங்கர் தகவல்



சென்னை : ஜன. 30-

தென் மாவட்டங்களுக்கு செல்லும் அனைத்து போக்குவரத்து கழகத்தை சேர்ந்த 710 பேருந்துகள் இன்று முதல் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும் என போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் முதற்கட்டமாக அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் பேருந்துகள் அனைத்து கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படுகின்றன.

ஜன.24ம் தேதி முதல் தனியார் ஆம்னி பேருந்துகள் அனைத்தும் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக இன்று முதல் அனைத்து போக்குவரத்து கழகங்களை சேர்ந்த செங்கல்பட்டு, திண்டிவனம் வழியாக தென் மாவட்டங்களுக்கு செல்லும் 710 பேருந்துகள் கிளம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும். மேற்கூறிய பேருந்துகள் கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இன்று முதல் இயக்கப்பட மாட்டாது.

இசிஆர் வழியாக செல்லும் பேருந்துகளும், பூந்தமல்லி வழியாக வேலூர், ஒசூர், ஆம்பூர், திருப்பத்தூருக்கு செல்லும் பேருந்துகள் அனைத்தும் வழக்கம்போல் கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும். மேற்கண்ட பேருந்து இயக்கம் மாற்றத்தில் பயணிகள் வசதிக்காக விழுப்புரம் போக்குவரத்து கோட்ட பேருந்துகள் மட்டும் தென் மாவட்டங்களில் இருந்து சென்னை நோக்கி வரும்போது, தாம்பரம் வரை இயக்கப்பட்டு பின் அங்கிருந்து கிளம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# காளைவாசல் பிள்ளைமார் சங்கத்தில் பதவியேற்பு விழா



மதுரை : ஜன. 30-

மதுரை காளைவாசல் பகுதியில் தென்னிந்திய வெள்ளாளர் சமூகத்தில் பி.ஆர்.தனவேலன் பிள்ளை மாநில தலைவராக காளைவாசல் பிள்ளைமார் சங்கத்தில் பதவியேற்பு விழா நடைபெற்றது.

இதில் திருநெல்வேலி மாவட்ட சைவ பிள்ளைமார் சங்க வ.உ.சி. பேரவை மாவட்ட செயலாளரும், ரத்ததான கழகம் சமூக ஆர்வலருமான மு.சங்கர் கலந்துகொண்டு புதிதாக பதவியேற்ற நிர்வாகிகளுக்கும், தமிழ்நாடு தென்னிந்திய வ.உ.சி. பேரவை மதுரை மேல ஆவணிரதவீதியில் மாவட்ட, மாநில நிர்வாகிகளுக்கும் சால்வை அணிவித்து கௌரவித்தனர். நிகழ்ச்சியில் வ.உ.சி. இளைஞர் பேரவை தலைவர் மின்னன் பிள்ளை, ரமேஷ் குமார், சிறுமளஞ்சி மணி, அர்ஜுனன் பிள்ளை, பணகுடி மணிகண்டன், நாகர்கோவில் ராஜா ஆகியோர் மதுரையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஜனவரி 29 "இந்திய பத்திரிக்கைகள் தினம் அனுசரிப்பு



புதுக்கோட்டை , ஜன. 30-

"1780 , ஜனவரி 29 அன்று ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்ற ஆங்கிலேயர் Bengal Gazette or Calcutta General Advertiser என்ற ஆங்கில வாரப் பத்திரிக்கையை வெளியிட்டார். இது தான் இந்தியாவின் முதல் பத்திரிக்கை. கொள்கைப் பிடிப்போடு, அச்சமின்றி எழுதியதற்காக இந்தியாவில் முதன் முதலில் சிறை சென்ற வரும் அவரே.

இந்த தினத்தில், அதிகாலையில் இல்லந்தோறும், நாள் நேரம் பாராமல் செய்தித்தாள்களை விநியோகம் செய்யும் நபர்களையும், முகவர்களையும் அவர்கள் செய்தித்தாள் எடுக்கும் இடத்திற்கே சென்று வாழ்த்தி, இனிப்பு வழங்கி கௌரவம் செய்யும் நிகழ்வை, புதுக்கோட்டை வாசகர் பேரவை மற்றும் மரம் நண்பர்கள், நான்காவது ஆண்டாக செய்து வருகிறார்கள். அந்த நிகழ்வு இன்றும் புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மூப்பது ஆண்டுகளுக்கு மேலாக செய்தித்தாள் விநியோகம் செய்யும் செல்வம் உட்பட 25 நபர்கள் மற்றும் முகவர்களுக்கு சால்வை அணிவித்து இனிப்புகள் வழங்கி கௌரவம் செய்யப்பட்டது.

வாசகர் பேரவை செயலர் சா.விஸ்வநாதன், மரம் நண்பர்கள் செயலர் ப.ராதாகிருஷ்ணன் என்கிற கண்ணன், உறுப்பினர் பொறியா ளர் வி.இறையன்பு ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# ஈரோடு வேப்பம்பாளையத்தில் சுற்றுலா பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கல்லூரி மாணவி பலி : 30 பேர் காயம்



ஈரோடு : ஜன. 30-

ஈரோடு வேப்பம் பாளையத்தில் சுற்றுலா பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கல்லூரி மாணவி உயிரிழந்த நிலையில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈரோடு வேப்பம்பாளையத்தில் உள்ள தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் பி.பி.ஏ 3ஆம் ஆண்டு படிக்கும் மாணவ, மாணவிகள் 50க்கும் மேற்பட்டோர் கர்நாடகா மாநிலத்திற்கு கல்வி சுற்றுலா செல்வதற்காக தனியார் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கல்லூரி மாணவர்களை ஏற்றி கொண்டு பேருந்து கிளம்பிய நிலையில் கல்லூரி நுழைவு வாயிலிலிருந்து சிறிது தொலைவில் வளைவில் திரும்ப முயற்சி செய்தபோது ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் பேருந்தில் பயணம் செய்த 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளில் 40கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சம்பவம் குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மருத்துவக்குழுவினர், தீயணைப்பு போலீசார் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் என பலர் காயமடைந்தவர்களை 6க்கும் மேற்பட்ட 108 ஆம்புலன்ஸ்களில் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை மற்றும் பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தனர்.

இந்த விபத்தில் பேருந்து அடியில் சிக்கி ஸ்வேதா என்ற கல்லூரி மாணவி சம்பவ இடத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தொடர்ச்சியாக ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதிஷ் சம்பவ இடத்தை பார்வையிட்டார். காயமடைந்த மாணவர்களை ஈரோடு அரசு மருத்துவமனையில் நேரில் சந்தித்தும் விபத்து நிகழ்ந்ததை குறித்தும் கேட்டறிந்தார். மேலும் இந்த விபத்து குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாஜகவை கழட்டி விட்டது கழட்டி விட்டது தான் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் திட்டவட்டம்



சென்னை : ஜன. 30-

தூக்கத்தில் எழுப்பி கேட்டாலும் பாஜகவுடன் கூட்டணி இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு. கழட்டி விட்டது விட்டதுதான். பாஜகவுடன் எங்கள் கட்சிக்கு ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் திட்டவட்டமாக கூறியுள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் மக்களவைத் தேர்தல் தொடர்பாக அதிமுக தொகுதி பங்கீட்டுக்குழு ஆலோசனை மேற்கொண்டது. இதில் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், தங்கமணி, வேலுமணி, பெஞ்சமின் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்நிலையில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், " இந்தியா கூட்டணியில் பல முரண்பாடுகள் உள்ளன. இந்தியா கூட்டணி உடைந்ததுபோல திமுக கூட்டணியும் உடையலாம். இந்தியா கூட்டணி கட்சிகள் இடையே ஒத்த கருத்துகள் இல்லை.

தூக்கத்தில் எழுப்பி கேட்டாலும் பாஜகவுடன் கூட்டணி இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு. கழட்டி விட்டது விட்டதுதான். பாஜகவுடன் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை. தன்னை முன்னிலைப்படுத்தவே அண்ணாமலை பேசி வருகிறார். ஆனால், அவர் பாஜகவை முன்னிலைப்படுத்தவில்லை.

தமிழக மக்களை ஏமாற்றி தமிழகத்தில் காலூன்ற நினைக்கும் பாஜகவின் எண்ணம் பலிக்காது. நடக்காத விஷயத்தைக் கூறி திசைதிருப்ப அண்ணாமலை முயற்சிக்கிறார். விரைவில் அதிமுகவுடன் கூட்டணி அமைக்கும் கட்சிகள் குறித்த அறிவிப்புகளை வெளியிடுவோம்" என்றார்.

# 15 மாநிலங்களில் காலியாக உள்ள 56 மாநிலங்களவை உறுப்பினர் இடங்களுக்கு தேர்தல் தேதி அறிவிப்பு



டெல்லி, ஜன. 30-

5 மாநிலங்களில் காலியாக உள்ள 56 மாநிலங்களவை உறுப்பினர் இடங்களுக்கு தேர்தல் தேதி அறிவித்துள்ளனர்.

மாநிலங்களவையில் உள்ள 56 இடங்களுக்கு பிப்.27-ல் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளனர். பின்வரும் 15 மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்கள் கவுன்சிலின் 56 உறுப்பினர்களின் பதவிக் காலம் ஏப்ரல் 2024 இல் முடிவடைவதால் மீண்டும் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

உ.பி.யில் 10, பீகார் , மராட்டியம் தலா-6, ம.பி, மேற்குவங்கத்தில்-5 ஆந்திரா, தெலுங்கானா -3, சண்டிகர்-1, குஜராத்-4, அரியானா, ஹிமாச்சல் பிரதேசம்-1, கர்நாடகா-4 உத்தர்காண்ட்-1, வெஸ்ட்பெங்கால்-5, ஒடிசா, ராஜஸ்தான்-3 ஆகிய 56 மாநிலங்களவை உறுப்பினர் இடங்களுக்கு தேர்தலை பிப் -27ம் தேதி நடைபெறும் என்று அறிவித்துள்ளது. இப்போது, பின்வரும் திட்டத்தின்படி மேற்கூறிய மாநிலங்களில் இருந்து மாநிலங்களவைக்கு இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்த ஆணையம் முடிவு செய்துள்ளது.

பிப்.8ம் தேதி அறிவிப்புகள் வெளியிடப்படும். வேட்புமனு தாக்கல் செய்வதற்கான 15ம் தேதி கடைசி ஆகும். 16ம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படும். வேட்புமனுக்களை வாபஸ் பெறுவதற்கான 20ம் தேதி கடைசி நாள். வாக்குப்பதிவு பிப்.27ம் தேதி ஆகும். காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்குச் சீட்டில் விருப்பத்தேர்வுகளைக் குறிக்கும் நோக்கத்திற்காக, தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்பட்ட முன் நிர்ணயிக்கப்பட்ட விவரக்குறிப்பின் ஒருங்கிணைந்த வயலட் வண்ண ஸ்கெட்ச் பேனாகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மேலே கூறப்பட்ட தேர்தலில் வேறு எந்த பேனாவும் எந்த சூழ்நிலையிலும் பயன்படுத்தப்படக்கூடாது. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதி செய்வதற்காக பார்வையாளர்களை நியமிப்பதன் மூலம் தேர்தல் செயல்முறையை உன்னிப்பாகக் கண்காணிக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# தமிழக அரசுக்கு மாணவர்கள் நலன்தான் முக்கியம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பேச்சு

மதுரை : ஜன. 30, மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் நேற்று பள்ளிக் கல்வித்துறை சார்பில் 33 நேரடி நியமன வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் நடைபெற்றது. பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் அறிவொளி, தொடக்கக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கா.கார்த்திகா வரவேற்றார்.

இவ்விழாவில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக பங்கேற்று 33 நேரடி நியமன வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது: தமிழக முதல்வர் பள்ளிக் கல்வித்துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். அரசின் கீழ் பல்வேறு துறைகள் செயல்பட்டாலும், பள்ளிக் கல்வித்துறை செயல்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. எந்தவொரு துறை வளர்ச்சிக்கும் அடிப்படை ஆதாரமாக விளங்கும் மனித வளத்தை உருவாக்கும் பெரும் பங்கு பள்ளிக் கல்வித்துறைக்கு உண்டு.

பள்ளிக்கல்வித் துறையின் ஓர் அங்கமாக தொடக்கக் கல்வி இயக்ககம் உள்ளது. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலைப்பள்ளிகளின் ஒன்றிய அளவிலான ஆய்வு அலுவலர்களாக செயல்படுபவர்கள் வட்டாரக் கல்வி அலுவலர்கள்.

தமிழகத்திலுள்ள 414 ஒன்றியங்களில் 851 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்கள் அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. அதில் நடப்பாண்டில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு நடந்தது. அதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட 33 நேரடி நியமன வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன. பணி நியமன ஆணை பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் பணியிடங்களில் தங்களது பொறுப்புணர்ந்து சிறப்புடன் பணியாற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இவ்விழாவில், பள்ளிக்கல்வித்துறை மாவட்டக்கல்வி அலுவலர்கள், கல்வித்துறை ஊழியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மதுரையில் அழகர்கோவில் சாலையிலுள்ள கோர்ட்யார்ட் ஹோட்டலில் 'நம்ம ஸ்கூல், நம்ம ஊரு பள்ளி' நிகழ்ச்சியில் அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு உதவிய நன்கொடையாளர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இதில் பங்கேற்ற பள்ளி வளர்ச்சி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி



நன்கொடையாளர்களை பாராட்டி கவுரவித்தார்.

அதன்படி, மதுரை யா.கொடிக்குளத்தைச் சேர்ந்த கனரா வங்கி ஊழியர் ஆயி என்ற பூரணம் என்பவர் தனக்கு சொந்தமான சுமார் ரூ.7 கோடி மதிப்புள்ள 1.52 ஏக்கர் நிலத்தை அரசுப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு தானமாக வழங்கினார். அவரது செயலை பாராட்டி தமிழக முதல்வர் ஸ்டாலின் குடியரசு தின விழாவில் தமிழக முதல்வரின் குடியரசு தின சிறப்பு விருது வழங்கி பாராட்டினார். அதனைத்தொடர்ந்து நேற்று மதுரையில் நடந்த விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நில தானம் வழங்கிய ஆயி என்ற பூரணத்திற்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கி கவுரவித்தார்.

அதேபோல், மதுரை மாநகராட்சி பள்ளி வளர்ச்சிக்கு ரூ.1.10 கோடி நிதியளித்த அப்பள வியாபாரி ராஜேந்திரன் என்பவருக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி கவுரவித்தார். அதேபோல், பள்ளிகளின் மேம்பாட்டுக்கு ரூ.20 லட்சம் நிதியளித்த பேராசிரியர் சாலமன் பாப்பையாவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்.

மதுரை வேலம்மாள் பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் நேற்று தனியார் பள்ளி இயக்ககத்தின் சார்பில் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகள் வழங்கும் விழா நடைபெற்றது. மதுரை மண்டலத்தில் மதுரை, தேனி, சிவகங்கை. ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் உள்ளடக்கிய ஐந்து மாவட்டங்களைச் சார்ந்த 437 தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்.

இதில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது: "தமிழகத்தில் தனியார் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் மெட்ரிகுலேசன் பள்ளிகள், மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிகள், சுயநிதி உயர்நிலை பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள், இளம் மழலையர் பள்ளிகள் மற்றும் மாநிலப் பாடத்திட்டம் அல்லாத பிற வாரியப் பள்ளிகள் என மொத்தம் 12,631 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், ஏறத்தாழ 57 லட்சம் குழந்தைகள் படிக்கின்றனர்.

தமிழக அரசுக்கு அரசுப் பள்ளி மாணவர்கள், தனியார் பள்ளி மாணவர்கள் என்ற பாகுபாடும் இல்லை. ஒட்டுமொத்தமாக மாணவர்கள் நலன்தான் முக்கியம். தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னோடியாக இருப்பதற்கு மாநிலத்தின் கல்வி வளர்ச்சியே காரணம். கல்வி வளர்ச்சியில் அரசுப் பள்ளிகளின் பங்களிப்பைப்போல், தனியார் பள்ளிகளின் பங்களிப்பும் முக்கிய பங்கு வகிக்கிறது.

தனியார் பள்ளிகளுக்கு 3 ஆண்டுக்கு ஒருமுறை மண்டலம் வாரியாக தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய 4 மண்டலங்களில் 1,488 தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மதுரை மண்டலத்துக்கு உட்பட்ட மதுரை, தேனி, சிவகங்கை. ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 437 தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன" என்றார். இவ்விழாவில், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், துணை மேயர் தி.நாகராஜன் உள்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# "ரஜினி, கமல், விஜய் உட்பட அனைவரிடமும் ஆதரவு கேட்போம்" – பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன்



சென்னை : ஜன. 30-

"வரும் மக்களவைத் தேர்தலில், ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய் உள்ளிட்ட அனைத்து நடிகர், நடிகைகளிடமும் ஆதரவு கேட்போம். அனைவரிடமும் ஆதரவு கேட்பது எங்களுடைய வேலை. ஆதரவு கொடுப்பதும், கொடுக்காமல்இருப்பதும் அவரவரது விருப்பம்" என்று பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

பாஜகவின் தேசிய மகளிர் அணி தலைவரும், தமிழக சட்டப்பேரவை உறுப்பினருமான வானதி சீனிவாசன் சென்னையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, "தமிழக பாஜக சார்பில், ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டு வருகிறது. அதன்படி, நேற்று தென்சென்னை தொகுதிக்கான தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டது. ஏற்கெனவே, பாஜக தேர்தல் பணிகளைத் துவக்கிவிட்டது. இந்த தேர்தல் அலுவலகம், தேர்தல் பணிகளை ஒருங்கிணைப்பதற்கான மிக முக்கியமான மையமாக இருக்கும். இந்த தேர்தல் அலுவலகங்கள், பாஜகவின் வெற்றிக்கு மிகப் பெரிய அடித்தளமாக இருக்கும்.

இந்தியா கூட்டணியில் மிக முக்கியமாக பங்குவகித்த நிதீஷ் குமார் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வந்திருக்கிறார். கடந்த பத்து நாட்களில் இந்த கூட்டணியில் இருந்தவர்கள் எல்லாம் எப்படி பிரிந்து செல்கின்றனர், என்பதை பார்த்து வருகிறோம். எந்த மாநிலத்தில் யாரைத் தொடர்பு கொள்வது, யாருடன் கூட்டணி அமைப்பது என்று தேசிய தலைமை கவனித்து வருகிறது. தமிழக மக்களுக்கு பிரதமர் மோடி தலைமையிலான அரசு என்ன செய்துள்ளது என்பதை விளக்கி பாஜக பிரச்சாரம் செய்யும். தமிழகத்தில் கூட்டணி குறித்து தேசிய தலைமை அறிவிக்கும் வரை அதுதொடர்பாக நாங்கள் எதுவும் பேசுவதற்கு இல்லை.

இந்தியா கூட்டணி சுயநலத்துக்காக தொடங்கப்பட்ட கூட்டணி என்று ஆரம்பம் முதலே கூறிவந்தோம். இந்த கூட்டணி நிலைக்காது என்பதை மீண்டும் மீண்டும் கூறி வந்தோம். அக்கூட்டணியில் உள்ள தலைவர்களுக்கு மக்கள் நலனிலும் நாட்டின் வளர்ச்சியிலும் அக்கறை இல்லை. இதனால், அந்த கூட்டணி சிதறிக் கொண்டு இருக்கிறது. பாஜகவைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் புதிய உறவுகளை, புதிய கட்சிகளைச் சேர்த்துக் கொண்டே இருக்கிறது. வரும் தேர்தலில், ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய் உள்ளிட்ட அனைத்து நடிகர், நடிகைகளிடமும் ஆதரவு கேட்போம். அனைவரிடமும் ஆதரவு கேட்பது எங்களுடைய வேலை. ஆதரவு கொடுப்பதும், கொடுக்காமல் இருப்பதும் அவரவரது விருப்பம்" என்று கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் இத்தாலி வீரர் ஜன்னிக் சின்னர் சாம்பியன்

**மெல்பர்ன் : ஜன. 30,**

**ஆஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இத்தாலி வீரர் ஜன்னிக் சின்னர் சாம்பியன் பட்டம் வென்றார். இது இவர் வெல்லும் முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.**



ஆஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டி மெல்பர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இத்தாலி வீரர் ஜன்னிக் சின்னரும், ரஷ்ய வீரர் டேனியல் மேத்வதேவும் மோதினர். இந்தப் போட்டியில் ஜன்னிக் சின்னர் 3-6, 3-6, 6-4, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் டேனியல் மேத்வதேவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

முதல் 2 செட்களில் ஆக்ரோஷமாக விளையாடினார் டேனியல் மேத்வதேவ். இதனால் முதல் 2 செட்களையும் அவர் 6-3, 6-3 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார்.

ஆனால் அடுத்த 3 செட்களிலும் சுதாரித்து ஆடினார் ஜன்னிக் சின்னர். 3 செட்களையும் வென்றால் மட்டுமே பட்டத்தைக் கைப்பற்ற முடியும் என்பதால் ஜன்னிக் சின்னர் அபாரமாக விளையாடினார்.

கடைசி 3 செட்களிலும் சிறப்பாக விளையாடிய ஜன்னிக்சின்னர் 6-4, 6-4, 6-3 என்ற கணக்கில் செட்களை கைப்பற்றி பட்டத்தை வென்றார்.

22 வயதாகும் ஜன்னிக் சின்னர் வெல்லும் முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும் இது. அரை இறுதியில் முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச்சையும், ஜன்னிக் சின்னர் வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வெல்லும் முதலாவது இத்தாலி வீரரும் ஜன்னிக் சின்னர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

2021-ம் ஆண்டு அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் மேத்வதேவ் பட்டம் வென்றிருந்தார். அதைத் தொடர்ந்து அவர் 5 கிராண்ட்ஸ்லாம் போட்டியின் இறுதிவரை சென்று தோல்வி கண்டுள்ளார். 2021, 2022-ம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டியின் இறுதிச் சுற்று வரை முன்னேறியிருந்த மேத்வதேவ் அவற்றில் தோல்வி கண்டிருந்தார். தற்போது ஆஸ்திரேலிய ஓபன் இறுதிச் சுற்றில் 3-வது முறையாக அவர் தோல்வி கண்டுள்ளார். ஆஸ்திரேலிய ஓபனில் அவர் சாம்பியன் பட்டம் வெல்ல முடியாத வகையில் அவரை துரதிருஷ்டம் துரத்தி வருவதாக ரசிகர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

# அடுத்த 3 ஐ.பி.எல். சீசன்களில் தோனி விளையாடுவார்

**டெல்லி : ஜன. 30,**

**மகேந்திர சிங் தோனி உடனான நட்பு குறித்து இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தீபக் சாஹர் கூறியதாவது:- அறுவை சிகிச்சைக்கு பின்னர் தோனி முழுமையாக குணமடைந்து விட்டார். என்னை பொறுத்தவரை அடுத்த 2 அல்லது 3 சீசன்களில் சி.எஸ்.கே. அணிக்காக அவர் விளையாட வர வேண்டும். இந்திய வீரர்கள் தாண்டி வெளிநாட்டு அணிகளை சேர்ந்த வீரர்கள் தோனியுடன் பேச, நேரம் செலவிட விரும்புவார்கள்.**



தோனி மிகவும் எளிமையான பழக்க வழக்கம் உடையவர். எல்லோரையும் சமமாக நடத்தக்கூடியவர். அதேசமயத்தில் அவர் கிரிக்கெட் குறித்து தெளிவான புரிதல் வைத்திருப்பார். அவரிடம் நேரம் செலவிடுவது கிரிக்கெட் வீரர்களுக்கு மிகவும் பிடிக்கும். தோனி மீது தனிப்பட்ட முறையில் அதிக பாசம் எனக்கு இருக்கிறது.

தோனியை என்னுடைய மூத்த அண்ணனாக பார்க்கிறேன். அவரும் என்னை தம்பியாக பார்ப்பார் என்று நம்புகிறேன். எங்களுக்கு வேடிக்கையான தருணங்கள் நிறைய இருக்கிறது. கொரோனா நேரத்தில் நாங்கள் இருவரும் பல்வேறு விளையாட்டுகளை சேர்ந்து விளையாடி உள்ளோம்.

களத்திற்கு வெளியே நிறைய நேரம் செலவு செய்திருக்கிறோம். அவரிடம் இருந்து நிறைய கற்றுள்ளேன். எனக்கு இந்திய அணியில் விளையாட வாய்ப்பு அவரால் தான் கிடைத்தது. 2018-ம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் எனக்கு விளையாட 14 ஆட்டங்கள் கொடுத்தார். அதுதான் நான் இந்திய அணிக்கு தேர்வாவதற்கு முக்கிய காரணம் என்று தீபக் சாஹர் கூறினார்.

வரலாறு சினிமா

# உளவியல் ஆசிரியையாக பூமிகா நடிக்கும் 'ஸ்கூல்'

**சென்னை : ஜன. 30,**

**குவான்டம் பிலிம் ஃபேக்டரி சார்பில் ஆர். கே.வித்யாதரன், கே.மஞ்சு இணைந்து தயாரிக்கும் படம், 'ஸ்கூல்'.**




இதில் பூமிகா சாவ்லா, யோகிபாபு, கே.எஸ். ரவிகுமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள். பக்ஸ், சாம்ஸ் ஆகியோருடன் பலர் நடிக்கின்றனர். ஆதித்யா கோவிந்தராஜ் ஒளிப்பதிவு செய்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி ஆர்.கே. வித்யாதரன் இயக்குகிறார்.

படம் பற்றி அவர் கூறும்போது, "இது ஸ்கூலில் நடக்கும் கதையைக் கொண்ட உளவியல் த்ரில்லர் படம். இன்றைய பள்ளி மாணவ, மாணவிகளின் கண்ணோட்டத்தில் சமுதாயத்தில் நடக்கும் கிரைம் சம்பவங்களை ஆராயும் விதமாக திரைக்கதை இருக்கும். அதே நேரத்தில் ஆவிகள், பிசாசுகள் பற்றிய நம்பிக்கைகள் குறித்தும் தீவிரமாகச் சொல்லவிருக்கிறோம். மாணவர்களை உளவியல் ரீதியாக ஆராய்ச்சி செய்யும் ஆசிரியராக பூமிகாவும் மாணவர்களை நல்வழிக்கு நடத்திச்சொல்லும் ஆசிரியராக யோகி பாபுவும், போலீஸ் அதிகாரியாக கே.எஸ். ரவிகுமாரும் நடிக்கின்றனர்" என்றார். இதன் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியுள்ளது.

# காதலனுடன் சண்டை போட்டிருக்கிறேன் : பிரியா பவானி சங்கர்

**சென்னை : ஜன. 30,**

**சின்னத்திரையில் இருந்து பெரிய திரைக்கு வந்தவர் பிரியா பவானி சங்கர். ராஜ் என்பவரைத் தன் கல்லூரி நாட்களில் இருந்தே காதலித்து வருகிறார்.**



இதைப்பல பேட்டிகளிலும் வெளிப்படையாகவே பகிர்ந்துள்ளார். காதலனுடன் நெருக்கமாக இருக்கும் படங்களை அடிக்கடி வெளியிடுவார். காதலனின் பிறந்த நாளையொட்டி அவருடன் நெருக்கமாக இருக்கும் படத்தை வெளியிட்டு அவர் எழுதியிருப்பதாவது: நீ என்னுடைய சிறந்த நண்பன்.

நாம் இருவரும் சிரித்திருக்கிறோம், சண்டை போட்டிருக்கிறோம், நிறைய அழுதிருக்கிறோம். தவறான வரிகளுடன் பிடித்தப் பாடலைக் கூட நீ சத்தமாக நம்பிக்கையுடன் பாடுவாய். நாம் இருவரும் வெவ்வேறானவர்கள், இருந்தாலும் எப்படியாவது என்னை காதலோடு இருக்க வைத்திருக்கிறாய். உன்னோடு என்னால் சத்தமாக சிரிக்கவும் முடியும், அமைதியாக உட்கார்ந்து இயற்கையை ரசிக்கவும் முடியும். என் வாழ்க்கையை இனிமையாக்க நீ மட்டும் எப்போதும் போதும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு வாலிபால் ஆடவர் பிரிவில் தமிழ்நாடு அணிக்கு தங்கப் பதக்கம்

**சென்னை : ஜன. 30,**

**6-வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 சென்னை, திருச்சி, மதுரை, கோயம்பத்தூர் ஆகிய 4 மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது. இதில் இடம் பெற்றுள்ள வாலிபால் போட்டி சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்று வந்தது.**



ஆடவருக்கான வாலிபால் போட்டியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 3 வது இடத்துக்கான ஆட்டத்தில் ஆந்திரா, உத்தரபிரதேசம் அணிகள் மோதின. இதில் ஆந்திரா 2624, 2520, 2520 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கம் கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு ஹரியாணா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் தமிழ்நாடு அணி 25-20, 25-23,22-25, 25-15 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றது.

கடந்த 2018-ம் ஆண்டு நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டில் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் தமிழ்நாடு அணி தங்கப் பதக்கம் வென்றிருந்தது. 2019-ம் ஆண்டில் தங்கப் பதக்கமும், 2020-ம் ஆண்டில் வெள்ளிப் பதக்கமும், 2022-ம் ஆண்டில் தங்கப் பதக்கமும் வென்றிருந்தது தமிழ்நாடு ஆடவர் அணி.

மகளிர் பிரிவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் தமிழ்நாடு அணி, குஜராத்தை எதிர்த்து விளையாடியது. இதில் தமிழ்நாடு மகளிர் வாலிபால் அணி 25-21, 25-15, 25-6 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கம் வென்றது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு வரலாற்றில் தமிழ்நாடு மகளிர் அணி பதக்கம் வெல்வது இது 3-வது முறையாகும். இதற்கு முன்னர் கேலோ இந்தியா விளையாட்டின் 4-வது பதிப்பில் தங்கப் பதக்கமும், 5-வது பதிப்பில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாடு மகளிர் அணியினர் தற்போது தொடர்ச்சியாக 3-வது முறையாக பதக்கம் வென்றுள்ளனர்.

3-வது இடத்துக்கான ஆட்டத்தை தொடர்ந்து இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் மேற்கு வங்கம் ராஜஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் மேற்கு வங்கம் 2325, 2522, 25 13, 2523 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றது. 2-வது இடம் பிடித்த ராஜஸ்தான் அணிக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டது.

பளுதூக்குதலில் ஆடவருக்கான 89 கிலோ எடைப்பிரிவில் தமிழகத்தின் தீர்ஷான் வெண்கலப் பதக்கம் வென்றார். சாலையோர சைக்கிள் பந்தயத்தில் ஆடவர் பிரிவில் தமிழகத்தின் எஸ். நிதின் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

நீச்சலில் ஆடவருக்கான 100 மீட்டர் பேக்ஸ்டிரோக் பிரிவில் தமிழகத்தின் நித்திக் நாதெள்ளா வெள்ளிப் பதக்கம் வென்றார். மகளிருக்கான 100 மீட்டர் பேக்ஸ்டிரோக் பிரிவில் தமிழகத்தின் தீக்சா சிவகுமார் தங்கப் பதக்கம் வென்றார். ஆடவருக்கான 200 மீட்டர் பிரஸ்ட்ஸ்டிரோக் பிரிவில் தமிழகத்தின் ஸ்ரீநிதி வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான வெற்றி : ஆனந்த கண்ணீர் வடித்த பிரையன் லாராவை கட்டியணைத்த கில்கிறிஸ்ட்

**பிரிஸ்பேன் : ஜன. 30,**

**ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி திரில் வெற்றி பெற்றது.**



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில், 2-வது போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் வெற்றி பெற்றது.

2வது போட்டியில் 216 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி விளையாடிய ஆஸ்திரேலிய அணி 50.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 207 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 8 ரன் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி வெஸ்ட் இண்டீஸ் திரில் வெற்றி பெற்றது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அபாரமாக பந்துவீசிய ஷமர் ஜோசப் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிவடைந்தது.

இந்நிலையில் 2வது போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி வெற்றி பெற்றதும் வர்ணனையில் ஈடுபட்டிருந்த வெஸ்ட் இண்டீஸ் முன்னாள் வீரர் பிரையன் லாரா ஆனந்த கண்ணீர் வடித்தார்.

அப்போது அவரை அருகில் இருந்த ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட் கட்டியணைத்து வாழ்த்துகள் தெரிவித்தார். இது தொடர்பான வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# நாங்கள் நல்ல துவக்கத்தை பெற்றும் அதை சரியாக பயன்படுத்தவில்லை

## தோல்வி குறித்து ராகுல் டிராவிட் கருத்து

**ஐதராபாத் : ஜன. 30,**

**இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தோல்வியை தழுவியது.**

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கடந்த 25-ம் தேதி தொடங்கியது. இந்த ஆட்டத்தில் 231 ரன் வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 202 ரன் மட்டுமே எடுத்து 28 ரன் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது.

இதையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் போட்டி பிப்ரவரி 2ம் தேதி தொடங்குகிறது.

இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தோல்விக்கான காரணம் என்ன என்பது குறித்து இந்திய பயிற்சியாளர் ராகுல் டிராவிட் கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,



எங்களுக்கு சதம் கிடைக்கவில்லை. எங்களது எந்த வீரரும் பெரிய சதம் அடிக்கவில்லை. எனவே ஏதோ ஒரு வழியில் முதல் இன்னிங்ஸில் 70, 80 ரன்களை தவற விட்டோம் என நினைக்கிறேன். 2-வது இன்னிங்ஸ் எப்போதுமே சவாலானதாக இருக்கும். உங்களுக்கு தெரியும். 2-வது இன்னிங்ஸில் எப்போதும் 230 ரன்களை சேசிங் செய்வது அவ்வளவு எளிதல்ல.

பிட்ச் சுழன்றபோது போப் அபாரமான இன்னிங்ஸ் விளையாடினார். நாங்கள் சேசிங் செய்ய முடியாத அளவுக்கு தேவையான ரன்களை இங்கிலாந்துக்கு கொடுத்தார். என்னைப் பொறுத்த வரை அதுதான் போட்டியில் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. 3-வது நாளில் போப் விளையாடிய விதம் எங்களுக்கு பின்னடைவை கொடுத்தது. கடினமான பிட்ச்சில் அவர் அதிக ரிஸ்க் கொண்ட ஷாட்டுகளை அடித்தார்.

முதல் இன்னிங்ஸில் பேட்டிங்கிற்கு சாதகமாக மைதானம் இருந்தும் நாங்கள் கூடுதலாக 70 ரன்களை எடுக்காமல் விட்டு விட்டோம். நாங்கள் நல்ல துவக்கத்தை பெற்றும் அதை சரியாக பயன்படுத்தவில்லை. எங்களுடைய பேட்ஸ்மேன்கள் யாரும் சதமடிக்கவில்லை. இருப்பினும் எங்களுடைய வீரர்கள் பலர் இன்னும் இளமையாக அனுபவமின்றி இருக்கின்றனர். எனவே இது அவர்களுக்கு நல்ல பாடமாக இருக்கும் என்று டிராவிட் கூறினார்.

# "என் மகள் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை" - சர்ச்சைக்கு ரஜினிகாந்த் விளக்கம்

**சென்னை : ஜன. 30,**

**'லால் சலாம்' படத்தின் ஆடியோ வெளியீட்டு நிகழ்ச்சியில் இயக்குநர் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் பேசிய கருத்துகள் சர்ச்சையான நிலையில், அது குறித்து நடிகர் ரஜினிகாந்த் விளக்கமளித்துள்ளார்.**

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர் பேசியதாவது: 'சங்கி' என்பது ஒரு கெட்டவார்த்தை என்ற அர்த்தத்தில் ஐஸ்வர்யா எங்குமே பேசவில்லை. அப்பா ஒரு ஆன்மிகவாதி, எல்லா மதங்களையும் விரும்புபவர், அவரை ஏன் இப்படி சொல்கிறார்கள் என்பதே அவருடைய பார்வை. 'லால் சலாம்' படம் நன்றாக வந்திருக்கிறது. மதநல்லிணக்கம் குறித்து பேசுகிறது. இப்போது நான் 'வேட்டையன்' படத்தின் படப்பிடிப்புக்காக சென்று கொண்டிருக்கிறேன். அந்தப் படமும் நன்றாக வந்துள்ளது" என்று ரஜினிகாந்த் பேசினார்.



நடிகர் ரஜினிகாந்த் சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ள திரைப்படம் 'லால் சலாம்'. இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் சென்னையில் நடைபெற்றது. இதில் படத்தின் இயக்குநரும், ரஜினிகாந்தின் மூத்த மகளுமான ஐஸ்வர்யா ரஜினிகாந்த் பேசுகையில், "அப்பாவ சங்கின்னு சொல்லும்போது கோபம் வரும். இப்ப சொல்றேன் ரஜினிகாந்த் சங்கி கிடையாது. அப்படி இருந்திருந்தா அவர் லால் சலாம் படத்துல நடிச்சு இருக்க மாட்டார். ஏனெனில், இது மனித நேயம் மிக்க உள்ளம் கொண்டவரால் மட்டும் தான் நடிக்க முடியும்" என்று கூறியிருந்தார். இது சமூகவலைதளங்களில் சர்ச்சையை கிளப்பியது.

'லால் சலாம்' படத்தில் 'மொய்தீன் பாய்' என்ற கதாபாத்திரத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ளார். விக்ராந்த், விஷ்ணு விஷால் இருவரும் பிரதான கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்துக்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார். இப்படத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கபில் தேவ் கவுரவ தோற்றத்தில் நடித்துள்ளார். லைகா சார்பில் சுபாஷ்கரன் படத்தை தயாரித்துள்ளார். ரெட் ஜெயன்ட் நிறுவனம் தமிழகத்தில் படத்தை வெளியிடுகிறது.

# 'ஒத்த ஓட்டு முத்தையா' படத்துக்காக கவுண்டமணியின் பன்ச் வசனங்களால் உருவாகும் பாடல்

**சென்னை : ஜன. 30,**

**நடிகர் கவுண்டமணி கதையின் நாயகனாக நடிக்கும் படம், 'ஒத்த ஓட்டு முத்தையா'.**

அரசியல், நகைச்சுவை திரைப்படமான இதை நடிகரும் இயக்குநருமான சாய் ராஜகோபால் இயக்குகிறார். சசி ஃபிலிம்ஸ் தயாரிப்பில் கோவை லட்சுமி ராஜன் மேற்பார்வையில் உருவாகும் இதன் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதில் யோகி பாபு, ராஜேஸ்வரி, சிங்கமுத்து, சித்ரா லட்சுமணன், மொட்டை ராஜேந்திரன் உட்பட பலர் நடிக்கின்றனர். சித்தார்த் விபின் இசை அமைக்கிறார். ஹெக்டர் ஸ்ரீதர் ஒளிப்பதிவு செய்கிறார்.

படம் பற்றி சாய் ராஜகோபால் கூறியதாவது: சுமார் 70 படங்களில் கவுண்டமணி-செந்திலுக்காக நகைச்சுவை பகுதி எழுதி இருக்கிறேன். 'சுந்தரி நீயும் சுந்தரன் நானும்', 'கிச்சா வயசு 16' படங்களை இயக்கி உள்ளேன். 'ஒத்த ஓட்டு முத்தையா', அனைவரும் ரசிக்கக் கூடிய அரசியல் கலந்த நகைச்சுவை திரைப்படம்.




இதில் யோகிபாபு விரும்பி நடித்தார். கவுண்டமணி, யோகிபாபு வரும் காட்சிகள் காமெடியாக இருக்கும். கவுண்டமணியிடம் யோகிபாபு அடிவாங்கும் காட்சிகளும் ரசிக்கும் விதமாக இருக்கும். அரசியல் கட்சி சார்பாகத் தேர்தலில் நின்று ஒரு ஓட்டில் தோற்றுவிடும் கவுண்டமணி, பிறகு சுயேச்சையாக இடைத்தேர்தலில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து யோகிபாபு போட்டியிடுவார். இறுதியில் யார் வெல்கிறார்கள் என்பது கதை.

சமகால அரசியலை நையாண்டி செய்யும் காட்சிகள் படத்தில் இருக்கும். நானும் முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறேன். கவுண்டமணி இதுவரை பேசிய பரபரப்பான பன்ச் வசனங்களை வைத்து ஒரு புரமோஷனல் பாடலை உருவாக்கி இருக்கிறோம். 90 சதவிகித படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது என்று சாய் ராஜகோபால் கூறினார்.

வரலாறு உலகம்

# இஸ்ரேல் கொடூர தாக்குதல் காசாவில் ஒரே நாளில் 165 பேர் பலி



**காசா : ஜன, 30,**

**ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் அழிக்கும் விதமாக காசா கொடூர தாக்குதலை நடத்தி வருகிறது.**

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே கடந்த அக்டோபர் 7-ந்தேதி தொடங்கி, 3 மாதங்களாக போர் நடந்து வருகிறது. இந்த போரில் காசாவில் மட்டும் 26 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர். காசா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் ராணுவம் நாளுக்கு நாள் தீவிரப்படுத்தி வருகிறது.

குறிப்பாக மத்திய காசா பகுதியில் இஸ்ரேலின் தரைப்படைகள் வேகமாக முன்னேறி வருகின்றன. கடந்த 2 நாட்களாக நஸர் ஆஸ்பத்திரி மற்றும் அல் அமல் ஆஸ்பத்திரி சுற்று வட்டாரத்தில் இஸ்ரேலின் தாக்குதல் அதிகமாக இருப்பதாகவும், அல் அமல் ஆஸ்பத்திரியில் ஆக்சிஜன் சிலிண்டர் தீர்ந்த நிலையில் நோயாளிகள் அவதிப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகலுடன் முடிந்த முந்தைய 24 மணி நேரத்தில் இஸ்ரேல் தாக்குதலில் 165 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும், 290 பேர் காயம் அடைந்து இருப்பதாகவும் ஹமாஸ் நிர்வாக அமைப்பின் சுகாதாரத் துறை அறிவித்தது. இதன் மூலம் அங்கு பலியான பாலஸ்தீனியர்கள் எண்ணிக்கை 26 ஆயிரத்து 422 ஆக உயர்ந்து உள்ளது. 65 ஆயிரத்து 87 பேர் காயம் அடைந்து உள்ளனர்.

# பிரேசிலில் விமானம் தரையில் விழுந்து நொறுங்கி 7 பேர் பலி




**ஸா பாலோ : ஜன. 30,**

**பிரேசிலின் அண்டை நாடான சாவ்பாலோ காம்பினாவில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டது. பிரேசிலின் தென்கிழக்கு மினாஸ்ரைசுக்கு அந்த விமானம் வந்து கொண்டிருந்தது.**

பிரேசிலின் சுரங்க நகரமான இட்டா பேலா மீது விமானம் வானில் பறந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென கட்டுப்பாட்டை இழந்த விமானம் தரையில் விழுந்து நொறுங்கியது. புல் மற்றும் மரங்களால் சூழப்பட்ட பகுதியில் அந்த விமானம் விழுந்தது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த விமானி உள்ளிட்ட 7 பேரும் பலியாகி விட்டனர். இது பற்றி அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இது வரை இறந்த 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்றவர்கள் உடல்களை தேடும்பணிநடந்துவருகிறது. உடைந்த விமானத்தின் பாகங்களும் சேகரிக்கபட்டு வருகிறது. விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது.

# அர்ஜென்டினாவில் உலக பராம்பரிய சின்னமான லாஸ் அலர்செஸ் தேசிய பூங்காவில் காட்டு தீ



**சுபுட் : ஜன. 30,**

**காட்டுத்தீ காரணமாக இதுவரை 600 ஹெக்டர் அளவில் சேதம் அடைந்துள்ளது.**

அர்ஜென்டினாவில் சுபுட் மாகாணத்தில் லாஸ் அலர்செஸ் தேசிய பூங்கா அமைந்துள்ளது. இந்த பூங்காவனது கிட்டதட்ட 1 லட்சத்து 90 ஆயிரம் ஹெக்டர் அளவில் பரந்து விரிந்துள்ளது. இந்த பூங்கா, பல்லாயிரக்கணக்கான அரிய வகை உயிரினங்களுக்கும் பழமையான மரங்களுக்கு பாதுகாப்பாக விளங்குகிறது. இதன் காரணமாக கடந்த 2017-ம் ஆண்டு இந்த பூங்காவை உலக பராம்பரிய சின்னங்களில் ஒன்றாக யுனெஸ்கோ அமைப்பு அறிவித்தது.

இந்தநிலையில் சனிக்கிழமை திடீரென தேசிய பூங்காவின் ஒரு பகுதியில் அருகே காட்டுத்தீ உருவானது. தீயானது சற்று நேரத்தில் மளமளவென பரவ தொடங்கியது. இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு சென்று தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த கட்டுங்கடங்காத காட்டுத்தீ காரணமாக இதுவரை 600 ஹெக்டர் அளவில் சேதம் அடைந்துள்ளது. தீயணைப்பு வீரர்களின் கட்டுப்பாட்டுக்குள்நிலைமை கொண்டு வரமுடியாத காரணத்தினால் அண்டை நாடுகளின் உதவியை பெற அர்ஜென்டினா அரசு முடிவெடுத்துள்ளது.

# வீரசாகசம் வினையானது : உயிரை பறித்த பேஸ் ஜம்பிங்



**தாய்லாந்து : ஜன. 30,**

**வீரசாகச விளையாட்டுக்களில், நிலையாக நிற்கும் உயரமான பொருட்கள் அல்லது கட்டிடங்களில் இருந்து பாராசூட் உதவியுடன் கீழே குதித்து சாதனை செய்வது, "பேஸ் ஜம்பிங்" எனப்படும்.**

பில்டிங், ஆன்டெனா, ஸ்பான் (பாலங்கள்), எர்த் (மலைகள்) ஆகியவற்றின் சுருக்கமே"பேஸ்"எனப்படும். சமூக வலைதளங்களின் வளர்ச்சியால், பேஸ் ஜம்பிங்க் விளையாட்டில் உயிரை பணயம் வைத்து ஈடுபடுவதும், அந்த வீடியோ காட்சிகளை தங்களின் சமூக வலைதள கணக்கில் வெளியிட்டு பயனர்களின் பாராட்டுகளை அதிக அளவில் பெறுவதும் அதிகரித்து வருகிறது.

இது ஒரு சிலருக்கு வருவாய் ஈட்டும் வழியாகவும் இருந்து வருகிறது. இந்நிலையில், தாய்லாந்தின் பட்டயா கிழக்கு கடற்கரை பகுதியில் உள்ள ஒரு சொகுசு விடுதியின் 29 தள அபார்ட்மென்டிலிருந்து இங்கிலாந்து நாட்டை சேர்ந்த 33-வயதான நபர் பேஸ் ஜம்பிங் விளையாட்டில் ஈடுபட்டார்.

அந்த கட்டிடத்தின் மேல் மாடிக்கு தனது நண்பர்களுடனும், பாராசூட் மற்றும் பிற தேவையான உபகரணங்களுடனும் சென்றார். அவரது சாகசத்தை நண்பர்கள் படம் பிடிக்க உடன் சென்றனர். அவர்கள் வீடியோ எடுக்க தொடங்கிய நிலையில், அந்த நபர் பாராசூட்டுடன் கீழே குதித்தார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர் கீழே குதித்து தரையை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது, அவரது பாராசூட் செயல்படவில்லை. இதனால், அவர் அங்கிருந்த ஒரு மரத்தில் விழுந்து, பின் அதிலிருந்தும் கீழே தரையில் விழுந்தார். இதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தை நேரில் கண்ட சிலர் உடனடியாக காவல்துறைக்கு தகவல் அளித்ததன் பேரில் அவர்கள் அங்கு விரைந்து வந்தனர்.

அங்கு திறக்காத நிலையில் ஒரு நீல நிற பாராசூட்டையும், அந்த நபரின் சடலத்தையும் கண்டனர். முதற்கட்ட விசாரணையில், அந்த நபரின் பெயர் நேதி ஓடின்சன் என்பதும், அவரின் சமூக வலைதளங்களை ஆராய்ந்ததில் அவர் இது போன்ற பாராசூட் விளையாட்டுக்களில் அனுபவமிக்க நபர் என்பதும் தெரிய வந்துள்ளது. தாய்லாந்து காவல்துறையினர் மேற்கொண்டு தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஜோர்டான் ட்ரோன் தாக்குதலில் 3 அமெரிக்க வீரர்கள் பலி

## அதிபர் ஜோ பைடன் எச்சரிக்கை



**வாஷிங்டன் : ஜன. 30,**

**சிரிய எல்லைக்கு அருகில் ஜோர்டான் நாட்டின் வடகிழக்கு பகுதியில் நடந்த ட்ரோன் தாக்குதலில் 3 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் மேலும், இதில் 25 வீரர்கள் காயமடைந்துள்ளதாகவும் அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலுக்கு அதிபர் ஜோ பைடன் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

ஆனால், மூன்று அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தட்ரோன் தாக்குதல் தங்கள் நாட்டின் எல்லையில் நடக்கவில்லை என்று ஜோர்டான் கூறியுள்ளது. இது குறித்து ஜோர்டான் அரசு செய்தித் தொடர்பாளர் முஹன்னத் முபைதீன் செய்தியாளர்களிடம், "அமெரிக்கப் படைகளைக் குறிவைத்த தாக்குதல் ஜோர்டானில் நடக்கவில்லை. இது சிரியாவில் உள்ள அல்-டான்ஃப் என்ற தளத்தில் நடந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலை ஈரான் ஆதரவு பெற்றபயங்கரவாத குழுக்கள் நடத்தியதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் குற்றம்சாட்டியுள்ளார். அதோடு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் 7ஆம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, மத்திய கிழக்குப் பகுதியில் பதற்றமான சூழலே நிலவி வருகிறது. அங்குள்ள பல்வேறு பயங்கரவாத குழுக்கள் சில தொடர்ச்சியாக ட்ரோன்கள், ராக்கெட்டுகள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஆகியவற்றின் மூலம் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. கடந்த சில மாதங்களில் மட்டும் ஈராக், சிரியாவில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களில் சுமார் 90 முறை தாக்குதல்கள் நடந்துள்ளன. இதுவரை உயிரிழப்புகள் ஏதும் நேராத நிலையில் தற்போது ஜோர்டான் எல்லையில் நடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் இறந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின் உள்ளிட்ட அதிகாரிகள் அதிபர் பைடனுக்கு விளக்கமளித்துள்ளார். மேலும் பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின் இது குறித்து, "எங்களுடைய வீரர்களின் நலன்களைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்" என்றார்.

தென் கரோலினாவில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அதிபர் ஜோ பைடன் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட அமெரிக்க வீரர்களுக்காக சிறிது நேரம் மௌன அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர், "நாங்கள் இதற்கு பதிலளிப்போம்" என்றார். மேலும் அவர் வெளியிட்ட அறிக்கையில், "இது வெறுக்கத்தக்க மற்றும் முற்றிலும் அநீதியான தாக்குதல். இந்தத் தாக்குதல் குறித்த தகவல்களை நாங்கள் சேகரித்து வருகிறோம், இது சிரியா மற்றும் ஈராக்கில் இயங்கும் தீவிர ஈரான் ஆதரவு போராளிக் குழுக்களால் நடத்தப்பட்டது என்பது எங்களுக்குத் தெரியும். இந்தத் தாக்குதலுக்கு அவர்கள் பதில் சொல்லியே தீர வேண்டும். இந்த தாக்குதலில் உயிரிழந்தோருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் நாளுக்கு நாள் நெருக்கடி வளர்ந்து வருகிறது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை காசாவில் 26,422 பேர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. அவர்களில் பெரும்பாலோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# ஹமாஸ் தாக்குதலுடன் ஐ.நா.வுக்கு தொடர்பு இஸ்ரேல் பரபரப்பு குற்றச்சாட்டு




**நியூயார்க் : ஜன. 30,**

**காசாவில் 20 லட்சம் மக்களின் தினசரி வாழ்வுக்கு தேவையான முக்கிய ஆதரவை இந்த அமைப்பு வழங்கி வருகிறது.**

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் தொடங்கியது முதல் இதுவரை ஐ.நா. நிவாரணம் மற்றும் பணிகள் கழகத்தின் (யு.என்.ஆர்.டபிள்யூ.ஏ.) பணியாளர்கள் 152 பேர் உயிரிழந்து உள்ளனர். ஐ.நா. அமைப்பை சேர்ந்த 13 ஆயிரம் பேர் காசாவில் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியதுடன் இந்த யு.என்.ஆர்.டபிள்யூ.ஏ. பணியாளர்களுக்கு தொடர்பு உள்ளது என்று இஸ்ரேல் திடுக்கிடும் குற்றச்சாட்டை தெரிவித்து உள்ளது.

எனினும், இதில் எத்தனை பேர் வரை தொடர்பில் உள்ளனர் என்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை. எனினும், அமெரிக்கா மற்றும் ஐ.நா. பணியாளர்கள் உள்பட 12 பணியாளர்களின் விவரங்களை இஸ்ரேல் பகிர்ந்துள்ளது.

இதனை தொடர்ந்து, 12 பணியாளர்களில் 9 பணியாளர்களை பணி நீக்கம் செய்து, ஐ.நா. பொது செயலாளர் ஆன்டானியோ கட்டிரெஸ் அறிவித்து உள்ளார். இவர்களில் ஒரு பணியாளர் உயிரிழந்து விட்டார். மற்ற 2 பேரின் அடையாளங்கள் இன்னும் தெளிவாக தெரியவரவில்லை.

இந்த கடுமையான குற்றச்சாட்டுகளின் மீது விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்டிரெஸ் உறுதி கூறியுள்ளார். இதுபற்றி விசாரணையும் நடந்து வருகிறது. என்றபோதும், இந்த அமைப்புக்கு நாடுகள் தொடர்ந்து நிதியுதவியை வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளார்.

ஏனெனில், 20 லட்சம் காசா மக்களின் தினசரி வாழ்வுக்கு தேவையான முக்கிய ஆதரவை இந்த அமைப்பு வழங்கி வருகிறது. அதனுடன், தற்போதுள்ள நிதியின் உதவியால் மொத்த காசா மக்கள் தொகைக்கு வேண்டிய அனைத்து தேவைகளையும் வருகிற பிப்ரவரியில் பூர்த்தி செய்வது என்பது இயலாத விசயம் என்று கட்டிரெஸ் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

ஆனால், இந்த அமைப்புக்கு எதிரான கடுமையான குற்றச்சாட்டுகளை அடுத்து, 9 நாடுகள் காசாவுக்கு வழங்கி வந்த நிதியுதவியை தற்காலிக அடிப்படையில் நிறுத்தி வைத்துள்ளன. அவற்றில் அமெரிக்காவும் அடங்கும்.

# துருக்கியில் வழிபாட்டு தலத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு




**துருக்கி : ஜன. 30,**

**மேற்கு ஆசியாவிலும், தென்கிழக்கு ஐரோப்பாவிலும் பரந்து விரிந்திருக்கும் நாடு, துருக்கி. இதன் தலைநகரம் அங்காரா.**

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ளது 19-ஆம் நூற்றாண்டை சேர்ந்த சான்டா மரியா தேவாலயம். வழக்கமான ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டிற்காக காலை அங்கு வந்திருந்தவர்கள், மண்டியிட்டு பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். பயங்கரவாத அமைப்பை சேர்ந்த முகமூடி அணிந்த 2 பேர் அந்த தேவாலயத்தின் பின்புறம் வழியாக உள்ளே நுழைந்தனர்.

அப்போது உள்ளே நுழைந்த ஒருவரை அவர்கள் பின்தொடர்ந்தனர். இருவரும், திடீரென அவரை நோக்கி சுட்டனர். இதில் அந்த நபர் அங்கேயே உயிரிழந்தார். சுட்டவர்கள் உடனே அங்கிருந்து தப்பி விட்டனர். தகவல் தெரிவிக்கப்பட்டு காவல்துறையினர் உடனடியாக அங்கு வந்து விசாரணையை தொடங்கினர்.

உயிரிழந்தவருக்கு 52 வயது என்றும், ஞானஸ்னானம் பெற இருந்தவர் என்றும் அவரது உறவினர் தெரிவித்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இஸ்தான்புல் நகர மேயர், எக்ரெம் இமாமொக்லு, "அமைதியான இப்பகுதியில் இது போன்ற தாக்குதல்கள் மிகவும் அரிதானது. நமது நகரத்தின் அமைதியை கெடுக்கும் வகையில் மத வழிபாட்டுத் தலங்களில் இத்தகைய தாக்குதல்களை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்" என தெரிவித்தார்.

துருக்கி அதிபர் ரெசெப் தாயிப் எர்டோகன், இத்தாக்குதலுக்கு எதிராக கண்டனம் தெரிவித்ததுடன் குற்றவாளிகள் 24 மணி நேரத்திற்குள் பிடிக்கப்படுவார்கள் என உறுதி அளித்துள்ளார். பின்னர், துருக்கியின் உள்துறை மந்திரி, குற்றத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இருவர் பிடிபட்டுள்ளதாகவும், அவர்களில் ஒருவர் தஜிகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் ரஷியர் என்றும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# மோனா லிசா ஓவியம் மீது சூப் வீசிய பெண் போராட்டக்காரர்கள்



**பாரீஸ் : ஜன. 30,**

**மோனா லிசா ஓவியம் இதற்கு முன்பாக பலமுறை சேதப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.**

16-ம் நூற்றாண்டில் ஓவியர் லியோனார்டோ டா வின்சியால் வரையப்பட்ட புகழ்பெற்ற மோனா லிசா ஓவியம் பிரான்சின் தலைநகர், பாரிசில் உள்ள லூவ்ரே அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டு இருந்தது.

இந்தநிலையில், உலக புகழ்பெற்ற மோனா லிசா ஓவியத்தின் மீது பெண் போராட்டக்காரர்கள் சூப்பை ஊற்றியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. துப்பாக்கி குண்டுகள் துளைக்காத கண்ணாடிக்கு பின்னால் பத்திரமாக மோனா லிசா ஓவியம் வைக்கப்பட்டு இருப்பதால் இந்த சம்பவத்தால் பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக வெளியான வீடியோவில் உணவு அக்கறை என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்ட டி-சர்ட் அணிந்து வந்த இரண்டு பெண்கள் ஓவியத்தின் மீது சூப் ஊற்றுவதை பார்க்க முடிகிறது. மேலும், தாக்குதல் பிறகு ஓவியத்தின் முன் நின்று கொண்டு 'ஆரோக்கியமான மற்றும் நிலையான உணவு' உரிமை வேண்டும் என்றும், நமது விவசாய முறை நோய்வாய்ப்பட்டு விட்டது என்றும் தெரிவித்தனர். தாக்குதல் நடந்த உடன் அருங்காட்சியக பொறுப்பாளர்கள் ஓவியத்தை கருப்பு துணி கொண்டு மூடினர்.

ஓவியர் லியோனார்டோ டா வின்சி அவர்களால் வரையப்பட்ட புகழ்பெற்ற மோனா லிசா ஓவியம் இதற்கு முன்பாகவும் பலமுறை சேதப்படுத்தப்பட்டதும், ஒருமுறை திருடப்பட்டு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை



**சியோல் : ஜன. 30,**

**அண்டை நாடுகளை அச்சுறுத்துகிற வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.**

கொரிய தீபகற்ப நாடுகளான வடகொரியா, தென்கொரியா இடையே மோதல் போக்கு தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால் அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் ராணுவம் மற்றும் உளவு தகவல்கள் பரிமாற்றத்தில் தென்கொரியா முன்னேற்றம் கண்டு வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தை பொருட்படுத்தாமல், சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை கண்டுகொள்ளாமல், அண்டை நாடுகளை அச்சுறுத்துகிற வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்தநிலையில் வடகொரியா கடற்படையை சேர்ந்த போர்க்கப்பல்கள் கொரிய நாடுகளுக்கு கிழக்கே உள்ள கடற்கரை பகுதியில் கண்காணிப்பு பணி மேற்கொண்டு வந்தன. அப்போது திடீரென அந்த கப்பல்களில் இருந்து நிலத்தில் இருந்து வானத்தை தாக்கும் நவீன ரக ஏவுகணைகளை சோதித்து பறிக்கப்பட்டுள்ளது. வானத்தை நோக்கி சரமாரியாக ஏவப்பட்ட அந்த ஏவுகணைகள் இலக்கை வெற்றிக்கரமாக தாக்கி அளித்துள்ளதாக தென்கொரியா ராணுவம் தெரிவித்துள்ளது.

# சீன கட்டுமான நிறுவனத்தை முடக்க ஹாங்காங் நீதிமன்றம் தீர்ப்பு




**ஹாங்காங் : ஜன. 30,**

**சீனாவை சேர்ந்த மிக பெரிய கட்டுமான நிறுவனம், எவர்கிராண்டே.**

எவர்கிராண்டே, சீனாவில் மட்டுமின்றி உலகின் பல நாடுகளில் அபார்ட்மென்ட் மற்றும் வணிக வளாகங்களை பெருமளவில் கட்டி விற்பனை செய்து வந்தது. கடந்த சில வருடங்களாக சீனாவில் விலைவாசி அதிகரிப்பால் பொதுமக்கள் அவசிய தேவைகளுக்கான செலவுக்கு போதிய வருமானம் இல்லாமல் தவிப்பதாகவும், இளைஞர்கள் திருமணம் செய்து கொள்வதை தள்ளி போடுவதுடன், தம்பதியினர் குழந்தைகளை பெற்று கொள்ள தயக்கம் காட்டுவதாகவும் செய்திகள் வெளியாகின.

பொருளாதார வீழ்ச்சியின் தொடர்ச்சியாக சீனாவில் வீடுகள் விற்பனை பெருமளவு குறைந்து விட்டது. இதன் தாக்கம் எவர்கிராண்டே நிறுவன வருவாயில் எதிரொலித்தது. கடந்த 2021ல் எவர்கிராண்டே வெளிநாட்டு கடன்களை திரும்ப செலுத்த இயலாத நிலைக்கு தள்ளப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

எவர்கிராண்டே நிறுவனத்திற்கு $240 பில்லியன் மதிப்பிற்கு சொத்துக்களும், $300 பில்லியன் மதிப்பிற்கு கடனும் உள்ளது. இந்நிலையில், 2022ல், அந்நிறுவனத்தில் பெருமளவு பணம் முதலீடு செய்திருந்த டாப் ஷைன் குளோபல் எனும் நிறுவனத்தின் மனுவை விசாரித்த ஹாங்காங் நாட்டின் நீதிமன்றம், எவர்கிராண்டே நிறுவனத்தை மூடப்பட்டதாக அறிவித்து அதன் சொத்துக்களை முடக்கி, கடனை ஈடு கட்ட நடவடிக்கை எடுக்குமாறு தீர்ப்பளித்துள்ளது.

இதை தொடர்ந்து ஹாங்காங் பங்கு சந்தையில் எவர்கிராண்டே வர்த்தகம் செய்வது நிறுத்தப்பட்டது. கடன் வழங்கியவர்களுக்கு நிவாரணத்திற்காக ஹாங்காங் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சீன நீதிமன்றங்கள் செயல்படுத்த அனுமதிக்குமா என்பது சந்தேகம் என்றும், இத்தீர்ப்பின் தாக்கம் ஏற்கெனவே நலிவடைந்துள்ள சீன பொருளாதாரத்தில் கடுமையாக இருக்கும் என்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அமைச்சர் ராஜ கண்ணப்பன் புறக்கணிப்பு

சிவகங்கை, ஜன. 30-

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை உயர்கல்வித் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் புறக்கணித்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நேற்று 34-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் ஆளுநர் ஆர்.என்.ரவி பட்டங்களை வழங்கினார்.




பல்வேறு துறைகளில் நேரடியாகவும் தொலைதூர கல்வி மூலமாகவும் பயின்ற மொத்தம் 40,414 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில் முனைவர் பட்டம் பெற்ற 164 பேர் தரவரிசையில் இடம் பெற்ற 184 பேர் என 348 பேருக்கு நேரடியாக படங்கள் வழங்கப்பட்டது.

இந்தபட்டமளிப்புவிழாவில் தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், இந்திய தொழில்நுட்ப கழக இயக்குநர் வீ. காமகோடி ஆகியோர் பங்கேற்பதாக இருந்தது. ஆனால் அமைச்சர் ராஜகண்ணப்பன் விழாவில் பங்கேற்காமல் புறக்கணித்தார். இதற்கான காரணம் ஏதும் வெளியாகவில்லை. விழாவில் பங்கேற்பதாகச் சொல்லிவிட்டு அமைச்சர் புறக்கணித்தது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே ஆளுநருக்கும் தமிழக அரசுக்கும் இடையே பல்வேறு பூசல்கள் நிலவுகின்றன. நீட் உள்ளிட்ட மசோதாக்களில் கையொப்பம் இடாதது உள்ளிட்ட பல்வேறு சர்ச்சைகள் இருக்கின்றன. இந்நிலையில், நாடு சுதந்திரம் பெற்றதற்கு நேதாஜியும், அவரது இந்திய தேசிய ராணுவமும், அதன் புரட்சியும்தான் முக்கிய காரணம் என்று கடந்த 23-ம் தேதி அவரது பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி பேசி இருந்தார். இது புதிய சர்ச்சையாக விடிந்தது.

காந்தியடிகளை சிறுமைப்படுத்துகிற வகையில் காழ்ப்புணர்ச்சியோடு ஆளுநர் பேசியதாக பல்வேறு அரசியல் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர். காந்தியை அவமதிக்கவில்லை என அதற்கு ஆளுநர் விளக்கம் தந்திருந்தார்.

இந்தச் சூழலில் இன்று காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில், "காந்தி குறித்த ஆளுநர் ஆர்.என்.ரவியின் கருத்து வன்மை கலந்த நோக்கத்துடன் இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசுக்கும் ஆளுநருக்கும் இடையேயான மோதல் பல்வேறு வகையிலும் தொடர்ந்து வலுவடைந்து வரும் நிலையில் ஆளுநர் தலைமையேற்ற பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் புறக்கணித்திருப்பது சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.




அரக்கோணத்தில் இருந்து பேரிடர் மீட்பு பிரிவை சேர்ந்த துணை ஆய்வாளர் ராகுல் குமார் தலைமையிலான 12 பேர் கொண்ட குழு காரைக்கால் வருகை புரிந்து பல்வேறு பள்ளிகள் மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் தாழ்வான பகுதிகள் ஆகிய இடங்களில் பேரிடர் காலங்களில் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகனை நடத்தி வரும் நிலையில் இதன் தொடர் நிகழ்வாக நெடுங்காட்டில் அமைந்துள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று காலை பள்ளி மாணவ மாணவிகளுக்கு மத்தியில் பேரிடர் காலங்களில் ஏற்படும் வெள்ளம், சுனாமி, பூகம்பம், கட்டிட இடுப்பாடுகள் போன்ற பேரிடர் நிகழ்வுகள் ஏற்பட்டால் மாணவர்களாகிய நீங்கள் உங்களை காத்துக் கொள்ளும் விதம் குறித்தும் மற்றவர்களை காப்பாற்றும் விதம் குறித்தும் செய்முறை விளக்கம் அளித்து மாணவர்களுக்கு செய்து காண்பித்தார்கள். மேலும் காயப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் நிலை குறித்தும் மேலும் அவர்களுக்கு முதலுதவி அளிப்பது குறித்தும் செய்து காண்பித்தார்கள். இந்த நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். இக்குழுவினர் அடுத்த மாதம் 3 -ஆம் தேதி வரை காரைக்காலில் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்த உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பெருமாள் கோயில் அடுத்த தெள்ளிமேடு கிராமத்தில்

# டி.கே.வி நர்சரி (மற்றும்) பிரைமரி பள்ளியில் 75வது குடியரசுதின விழாவும், 20ஆவது விளையாட்டு தினவிழாவும் கொண்டாடப்பட்டது

செங்கல்பட்டு , ஜன. 30-

செங்கல்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோயில் அடுத்த தெள்ளிமேடு கிராமத்தில் உள்ள டி.கே.வி நர்சரி (மற்றும்) பிரைமரி பள்ளியில் 75வது குடியரசுதின விழாவும், 20ஆவது விளையாட்டு தினவிழாவும் கொண்டாடப்பட்டது.



மேலும் இந்த விழாவில் பள்ளி தாளாளர் டாக்டர் விஜயகுமார் தலைமையேற்றார்.மேலும் இந்த விழாவில் செங்கல்பட்டு புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியராக பணிபுரியும் மேரிபிரமிளா பாலாஜி, மற்றும் கௌரவ விருந்தினராக பாலாஜி சென்னை உதவி ஆய்வாளர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பங்குக்கொண்டு விளையாட்டு தின விழா கொண்டாடப்பட்டது. மேலும் விழாவில் சிறப்பு விருந்தினர் மேரி பிரமிளா பாலாஜி கலந்தாய்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவியர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு ஒலிம்பிக் ஜோதியை ஏற்றி விழாவை துவக்கி வைத்தார். மேலும் மாணவ மாணவிகளின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டு மூவர்ணக் கொடிக்கு மரியாதை செலுத்தினார். பின்னர் கலை நிகழ்ச்சிகள், உடற்பயிற்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார். மாணவ மாணவிகளுக்கு மட்டுமின்றி, பெற்றோர்களை ஊக்குவிக்கும் வண்ணம் மியூசிக்கல் சேர் போட்டி நடத்தப்பட்டது. இந்த போட்டியில் வெற்றி பெற்ற பெற்றோர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுகள் வழங்கியதோடு மட்டுமல்லாமல் கூடைபந்தாட்ட வீரரான நம் சிறப்பு விருந்தினர் மேரி பிரமிளா பாலாஜி மாணவ மாணவிகளின் விளையாட்டிலும் படிப்பிலும் ஒழுக்கத்திலும் எவ்வாறு விளங்க வேண்டும் என்றும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அதற்கு பெற்றோர்கள் எவ்வாறு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் நல்ல அறிவுரைகளையும் வழங்கினார்.மற்றும் கௌரவ விருந்தினர் பாலாஜி சென்னை உதவி ஆய்வாளர் சிறந்த கால்பந்து வீரர். இவர் மாணவ மாணவிகளுக்கு கல்வியும் விளையாட்டும் எவ்வளவு முக்கியம் என்று எடுத்துரைத்தார். மேலும் இப்பள்ளி மாணவர் மாணவியர்கள் சிறப்பாக விளங்குவதற்கும், குழந்தைகளை அனைத்து துறைகளிலும் சிறப்பாக ஊக்கி இருப்பதற்கும். இந்த பள்ளியில் செயல்படும் அனைத்து நல் உள்ளங்களுக்கும், பள்ளி தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர், துணை தலைமை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், பள்ளி முக்கிய நிர்வாகிகளுக்கும், கடைநிலை ஊழியர்களும், மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள், அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு உட்பட்ட வெள்ளானூர் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

திருவள்ளூர் , ஜன. 30-

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் வெள்ளானூர் ஊராட்சியில் 75வது குடியரசு தினத்தை முன்னிட்டு கொள்ளுமேடு வி.பி.ஆர்.சி. கட்டிடத்தின் அருகில் கிராம சபை கூட்டம் ஏ.பிரபாகரன் ஊர் தலைவர் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சியில் தணிக்கை அறிக்கை குறித்து விவாதித்தல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், மக்கள் திட்டமிடுதல் இயக்கம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சி திட்டம் குறித்து விவாதித்தல், தூய்மை பாரத இயக்கம் குறித்து விவாதித்தல், ஜல் ஜீவன் இயக்கம் குறித்து விவாதித்தல், மகாத்மா காந்தி இயக்க ஊரக வேலை உறுதித் திட்டம்,அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், பிரதமர் மந்திரி ஜான் ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியன், பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இதர பொருள் குறித்து விவாதித்தல் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் எம். சதீஷ்குமார் மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய கவுன்சிலர் ஜி. தயாநிதி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வி.கே. வெங்கடேசன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் மகளிர் சுய உதவிக் குழுவினர் இவர்கள் முன்னிலையில் விவாதங்கள் நடைபெற்றது. ஊராட்சி செயலர் ஜே.நாகராஜ் வருகை தந்தை அனைவரையும் வரவேற்று.





காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் 16 வது மாவட்ட மாநாடு நடத்தப்பட்டது இதில் சிறப்பு விருந்தினராக கலாம் கனவு இந்தியா இயக்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ராஜேஷ் கலாம் எம் எஸ் சுவாமிநாதன் பவுண்டேஷன் விஞ்ஞானி பரசுராமன் ஸ்ரீபெரும்புதூர் வட்டார கல்வி அலுவலர் ஜெய்சங்கர் ஸ்ரீபெரும்புதூர் வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரி பேராசிரியர் கேப்டன் பாஸ்கர் மற்றும் முனைவர் தனஞ்செழியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர் துளிர் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாவட்ட அளவிலான மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழும் கேடயங்களும் அளிக்கப்பட்டன.காஞ்சிபுரம் மாவட்ட சார்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

# பொறையாரில் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்

தரங்கம்பாடி, ஜன.30:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே பொறையாரில் எம்.ஜி.ஆர் 107 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் அதிமுக சார்பில் நடைபெற்றது.



கூட்டத்திற்கு தரங்கம்பாடி பேரூராட்சி கழக செயலாளர் கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். மாநில இளைஞர் அணி இணை செயலாளர் கோமல் ஆர் கே அன்பரசன், ஒன்றிய கழக செயலாளர்கள் ஜெனார்த்தனம், ஏ.கே.சந்திரசேகன், இளங்கோவன், மகேந்திரவர்மன், மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் ப.பாபு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி செயலாளர் பிரேம்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செம்பனார்கோவில் ஒன்றிய கழகசெயலாளர் வி.ஜி.கண்ணன் வரவேற்றார்.

இதில் மயிலாடுதுறை மாவட்ட அதிமுக செயலாளரும் பூம்புகார் தொகுதி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான எஸ். பவுன்ராஜ், தலைமை கழக பேச்சாளர் நள்ளாற்று நடராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு புடவை, வேஷ்டி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

# ஆந்திர மாநில முதல்வராக ஜெகன்மோகன் ரெட்டி 2-வது முறை பதவி ஏற்பது உறுதி என அமைச்சர் ஆர்.கே.ரோஜா கூறினார்



ஊத்துக்கோட்டை,ஜன30-

ஆந்திர மாநில சுற்றுலாத்துறையின் சார்பில் தடா அருகில் உள்ள பீமாவாரிபாளையம் எனப்படும் பி.வி.பாலம் பகுதியில் புலிகாட் லேக் வியூ ரிசார்ட் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில்,சிறப்பு அழைப்பாளராக ஆந்திர மாநில அரசின் சுற்றுலாத் துறை மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் ஆர்.கே.ரோஜா கலந்து கொண்டு குத்து விளக்கை ஏற்றி,கல்வெட்டை திறந்து வைத்தார்.

பின்னர், ரிசார்ட் அறைகளை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அப்பொழுது அவர் பேசியதாவது: ஆந்திர மாநில சுற்றுலாத்துறை இந்தியாவில் 3-வது இடத்தில் உள்ளது என்று பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன். திருப்பதி, நெல்லூர், சென்னை ஆகிய மூன்று பெரிய நகரங்களுக்கு இடையில் இந்த சிறப்புமிக்க சுற்றுலாத்தலம் அமைந்துள்ளது. கொரோனா தாக்குதலுக்கு பின்னர், பொதுமக்கள் தங்களது வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது.பணத்தை வைத்துக் கொண்டு இருப்பதால் மட்டும் எந்த பயனும் இல்லை என்ற எண்ணம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

இதனால் சுற்றுலாத்தலங்களுக்கு குடும்பத்துடன் செல்ல வேண்டும், ஆனந்தமாக வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சுற்றுலா தலத்தால் இப்பகுதி மக்களின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும், இப்பகுதியும் வளர்ச்சியடையும் என்பதில் சந்தேகம் இல்லை.மேலும், ஆந்திர மாநில முதல்வராக ஜெகன்மோகன் ரெட்டி 2024-ம் ஆண்டு நடைபெறும் தேர்தலில் அமோக வெற்றி பெற்று 2-வது முறையாக ஆந்திர மாநில முதல்வராவது உறுதி ஆகும். ஹைதராபாத்தில் ஏ.சி-யில் உட்கார்ந்து கொண்டு ஆந்திர மாநில மக்களின் கஷ்ட, நஷ்டங்களை புரிந்து கொள்ளாமல் தேர்தலை சந்திக்க வருபவர்களை மக்கள் புறக்கணிப்பார்கள்.14 ஆண்டுகள் ஆந்திர மாநில மக்களுக்கு சந்திரபாபு நாயுடு என்ன செய்தார்? என்று பொதுமக்கள் கேள்வி எழுப்ப தயாராக உள்ளனர். இதனால் மக்களை குழப்ப பவன்கல்யாண், சந்திரபாபு நாயுடு, லோகேஷ்பாபு, ஷர்மிளா உள்ளிட்டோர் பல்வேறு வேலைகளை செய்து வருகின்றனர்.

இவர்களை பொதுமக்கள் நன்றாக அறிந்து உள்ளார்கள். தேர்தலுக்குப் பின்னர் இவர்கள் தங்களது மூட்டை, முடிச்சுகளை கட்டிக்கொண்டு ஹைதராபாத் நோக்கிச் செல்ல வேண்டிய காலம் வந்து விட்டது. ராஜசேகர் ரெட்டி இறந்தபோது ஆந்திர மாநிலத்தை காங்கிரஸ் கட்சி சின்னா பின்னமாக்க நினைத்தது. அப்பொழுது இந்த மக்களுக்கு உறுதுணையாக இருந்தவர் ஜெகன்மோகன் ரெட்டி ஆவார். ஒவ்வொரு வீட்டினரின் கஷ்ட, நஷ்டங்களில் பங்கு கொண்டவராக இருப்பதால் பொதுமக்களின் மனங்களில் ஜெகன்மோகன் ரெட்டி வாழ்ந்து வருகிறார்.

நான் நகரி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சராக ஆந்திர மாநிலம் முழுவதும் உலா வந்து கொண்டுள்ளேன். மீண்டும் எனக்கு வாய்ப்பு அளித்தாள் சட்டமன்ற உறுப்பினருக்கு போட்டியிடுவேன்.வாய்ப்பு வேறு ஒருவருக்கு தரப்பட்டால் ஜெகன்மோகன் ரெட்டிக்கும் ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸிக்கும் என்றும் உறுதுணையாக இருப்பேன். மேலும், என்னை போல் எம்.எல்.ஏ மற்றும் எம்.பி பதவிகளுக்கு வாய்ப்பு அளிக்காவிட்டாலும் வேறு ஏதாவது? பதவியை கொடுத்து அவர்களை ஜெகன்மோகன் ரெட்டி அழகாகப் பார்த்துக் கொள்வார். எனவே, கட்சிக்கும், அவருக்கும் உறுதுணையாக நானும், என்னை போன்ற உண்மையான கட்சியினரும் உறுதுணையாக இருப்போம் என்று அமைச்சர் ரோஜா கூறினார்.



சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி அலுவலக வளாகத்தில் 75 வது குடியரசு தின விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கோயம்பேடு முதன்மை நிர்வாக அலுவலர் (டிஆர்ஓ) (சிஏஓ) இந்துமதி கொடியேற்றி கொடிக்கு மரியாதை செலுத்தினர். உடன் மொத்த விற்பனை வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனை வியாபாரிகள் அனைவரும் கலந்து கொண்டு கொடிக்கு மரியாதை செலுத்தினர். பின்பு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பாண்டியன் சிறப்பான முறையில் செய்திருந்தார்.



கடலூர் மாவட்டம் லால்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் குடியரசு தின விழா தேசிய மாணவர் படை சாரணர் படையினர் அணிவகுப்புடன் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமுருகன் தலைமையில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பத்ஹீத்தீன் முன்னிலையில் பள்ளியின் தலைமை ஆசிரியர் தேசிய கொடியை ஏற்றி வைத்தார் இந்நிகழ்வில் லால்பேட்டை முஸ்லிம் ஜமாத் பொருளாளர் அப்துல் ரஹ்மான் முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் மர்ஜூக், நிஜார் அஹமத், ரியாஜுல்லா, பேரூராட்சி மன்ற உறுப்பினர் அப்துல் ரஷீத், சமூக ஆர்வலர் ஜெய்கர் லால்பேட்டை துபாய் ஜமாத் செயலாளர் பயாஜ் அஹமது மற்றும் தலைமை ஆசிரியர் செங்குட்டுவன் என்சிசி ஆசிரியர் ராஜவேல் மற்றும் ஆசிரியர்கள் பொதுமக்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கிருஷ்ணகிரி அருகே யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு – பொதுமக்கள் சாலை மறியல்

கிருஷ்ணகிரி : ஜன. 30-

கிருஷ்ணகிரி அடுத்த மகாராஜகடை அருகே யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், நாரலப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட மகாராஜாகடையைச் சேர்ந்தவர் விவசாயி சாம்பசிவம் (55). இவர் நேற்று காலை 6 மணிக்கு வீட்டில் இருந்து பூவகவுண்டன் ஏரி அருகிலுள்ள தனது விவசாய நிலத்திற்கு சென்றுள்ளார். அப்போது அப்பகுதியில் சுற்றித்திரிந்த 2 யானைகள் தாக்கியதில் சாம்பசிவம் சம்பவ இடத்திலேயே இறந்தார். இதையடுத்து, சாம்பசிவத்தின் சடலத்துடன், அவரது உறவினர்கள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த, 100க்கும் மேற்பட்டோர், கிருஷ்ணகிரி - குப்பம் சாலையில் மகாராஜாகடை பேருந்து நிறுத்தம் அருகே அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து விரைந்து வந்த போலீசாரும் வனத்துறையினரும் பொதுமக்களிடம் சமாதானபேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பொதுமக்கள், ''இந்த பகுதியில் சுற்றி திரியும் யானைகளை விரட்ட, போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை'' என்று குற்றம் சாட்டினர்.

வனத்துறையினருடனான ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்ற போதும் அப்பகுதி மக்கள் "ஏற்கெனவே கூறினோம், அப்படி இருந்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை" எனக்கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் வனத்துறையினர், "இனி யானைகள் விவசாய நிலங்களுக்குள் வராமல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துகிறோம்'' என்று உறுதியளித்ததையடுத்து, 9 மணிக்கு தொடங்கிய மறியல் போராட்டம் பகல் 12.30 மணிக்கு முடிவுக்கு வந்தது. அதன் பின் அனைவரும் கலைந்து சென்றனர். இதையடுத்து போலீசார் சாம்பசிவத்தின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி போலுப்பள்ளி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மறியல் போராட்டம் காரணமாக கிருஷ்ணகிரி - குப்பம் செல்லும் பேருந்துகள் மாற்றுப்பாதையில் திருப்பிவிடப்பட்டன.

இது குறித்து மகாராஜாகடை கிராமத்தைச் சேர்ந்த திருமூர்த்தி கூறும்போது, ''வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் தொடர்மழையால் நீர்நிலைகள் நிரம்பி செழிப்பாக உள்ளது. இதனால் இவ்வழியே ஆந்திரப்பிரதேசவனத்தை நோக்கிச் செல்லும் யானைகள் கூட்டம், அடிக்கடி பயிர்களை சேதப்படுத்துவதும், மனிதர்களை தாக்குவதும் தொடர்கதையாக உள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் நாரலப்பள்ளி ஊராட்சியில் மட்டும் யானை தாக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர்'' என்றார்

## உங்களுடன் போட்டியிடுங்கள் ; மற்றவர்களுடன் அல்ல
## தேர்வெழுதும் மாணவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை





## தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு 'மீடியா மேனியா'
## தினந்தோறும் செய்தி வரவேண்டும் எனச் செயல்பட்டு வருகிறார்

## லோக்சபா தேர்தலுக்கு முன்பாக சிஏஏ சட்டம் அமல்
## மத்திய அமைச்சர் திடீர் அறிவிப்பு




சென்னை / புதுக்கோட்டை | 30.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

30.01.2024 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜெய்சங்கர் பிரசாத் , இந்தியக் கவிஞர் (பி.1889) (இ.1937)



அம்ரிதா சேர்கில் , இந்தியப் பெண் ஓவியர் (பி.1913) (இ.1941)



இரா. இளங்குமரனார் , தமிழகத் தமிழறிஞர் (பி.1930) (இ.2021)



மு. க. அழகிரி , தமிழக அரசியல்வாதி (பி.1950)



## இன்றைய நினைவு நாள்

இராமலிங்க அடிகளார் , ஆன்மிகவாதி (பி.1823) (இ.1874)



மகாத்மா காந்தி , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், சட்டவறிஞர், மெய்யியலாளர் (பி.1869) (இ.1948)



ஜே. சி. குமரப்பா , தமிழகப் பொருளியல் அறிஞர் (பி.1892) (இ.1960)



## தியாகிகள் நாள் (இந்தியா)